மாலெ தீப்பொறி

MALAE THEEPORI

சுதந்திரம் • சமத்துவம் • ஒருமைப்பாடு
11வது கட்சி காங்கிரஸ் இகக(மாலெ)
பாட்னா, பீகார் • 15-20 பிப்ரவரி 2023

2023 மார்ச் 1-15 தொகுதி 21 இதழ் 14 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.150

# இகக(மாலெ) 11ஆவது கட்சிக் காங்கிரஸ்

பாட்னா – பீகார்





# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) விடுதலை
## 11வது அகில இந்திய மாநாடு நிகழ்வுகள்
















2023 மார்ச் 1-15

மாலெ தீப்பொறி

தொகுதி 21 இதழ் 14

இருவார இதழ்

## உள்ளே

1 1ஆவது கட்சி காங்கிரஸ் 4
ஜனநாயகம் காப்போம் இந்தியாவைக் காப்போம் 6
பொதுச் செயலாளர் துவக்கவுரை 9
அரசமைப்புச் சட்டத்தைக் காப்போம்-கருத்தரங்கம் 1 4

**ஆசிரியர்**
**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**
**பாலசுந்தரம்**
**பழ.ஆசைத்தம்பி**
**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**
**சொ.இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம்,
சென்னை – 600023

**நிர்வாக அலுவலகம்**

**3/254பி, ஜீவா தெரு,**
**வண்டலூர்**
**சென்னை – 600048**

**தொலைபேசி : 94435 07067**
**98403 40741**

malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com

தலையங்கம்

# பொய்ப் பிரச்சாரகர்களும் பசுக் குண்டர்களும்

*தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தன்னுடைய அடுத்த அவதூறுப் பிரச்சார ஆயுதத்தைக் கையில் எடுத்துள்ளார். இப்போது அவர் கார்ல் மார்க்ஸை நேரடியாகக் குறி வைத்துவிட்டார். கார்ல் மார்க்ஸின் சிந்தனை இந்தியாவைச் சிதைத்துவிட்டது என்கிறார். கூடவே டார்வினையும் வம்புக்கிழுக்கிறார். 'இழப்பதற்கு ஏதுமில்லை, அடிமை விலங்கைத் தவிர, அடைவதற்கோ ஒரு பொன்னுலகம் இருக்கிறது, உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்' என்று கூறி மானுட குலம் தழைத்தோங்க வறுமையில் வாடிய மாமேதை கார்ல் மார்க்ஸ். அவரைப்பற்றி ஆயிரக்கணக்கான பணியாளர்களுடன் ராஜ் பவனில், மக்கள் பணத்தில் சொகுசு வாழ்க்கை வாழும் ஆர்.என்.ரவி பேசுகிறார்!. மார்க்சியம் அந்நியக் கொள்கையாம். இத்தாலியின் பாசிச முசோலினியை மூஞ்சே சந்தித்ததும் ஜெர்மனியின் நாஜி கொள்கையான 'ஒரே கொடி, ஒரே தலைவர், ஒரே தத்துவம்' என்று ஆர்எஸ்எஸ் பேசிக் கொண்டு இருப்பதும் மட்டும் சுதேசிக் கொள்கையா? மார்க்ஸின் இயக்கவியல் பொருள்முதல்வாதமும் டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கொள்கையும் இராமாயணக் கதாபாத்திரங்களை வைத்து நாட்டு மக்களை ஏமாற்றி அதானி களைக் கொழுக்கச் செய்யும் ஆர்எஸ்எஸ் கூட்டத்தைச் சேர்ந்த ஆர்.என்.ரவிக்கு புரிந்திருக்க வாய்ப்பில்லைதான். அதனால்தான் வாயில் வந்தபடி பேசிக் கொண்டிருக்கிறார். இவரின் ஆர்எஸ்எஸ்–ஏபிவிபி அமைப்பைச் சேர்ந்தவர்கள் மத்திய பிரதேசத்தில் ஒரு பெண்ணை நரபலி கொடுப்பவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்ககள். அவர்களுக்கு பயந்து தமிழ்நாட்டில் தஞ்சம் அடைந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தனக்கு பாதுகாப்பு கேட்டு வழக்கு தொடுத்துள்ளார் அந்தப் பெண். அந்தப் பெண்ணே, 'நான் பாஜக–ஏபிவிபியைச் சேர்ந்தவள், என் தாயும் பாஜகதான். அவர் என்னை நரபலி கொடுக்க முயற்சிக்கிறார். அதற்கு பாஜக–ஆர்எஸ்எஸ்காரர்கள் துணை போகிறார்கள் என்று கூறியிருக்கிறார். தமிழ்நாட்டின் ஆளுநரான ஆர்.என்.ரவி அப் பெண்ணுக்குப் பாதுகாப்பு கொடுக்கலாமே! ஹரியானா மாநிலத்தில், நசீர் மற்றும் ஜுனைத் என இரண்டு இஸ்லாமி யர்களை மோனு யாதவ் என்கிற பசுப் பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்தவன் தீ வைத்து எரித்துக் கொன்றுள்ளான். ஹரியானாவை ஆளும் பாஜக அரசு இந்த பசுப் பாதுகாப்பு குண்டர்களுக்கு முழுமையான பாதுகாப்பை வழங்கிக் கொண்டிருக்கிறது. பிப்ரவரி 14 காதலர் தினத்தன்று பசுமாட்டைக் கட்டித் தழுவ வேண்டும் என்று ஒன்றிய அரசுத் துறையே அறிக்கைவிட்டு, அதன்படி மாட்டை கட்டிப்பிடிக்கப் போய் மாடு முட்டி குப்புறக் கிடந்தவர்களை பல இடங்களில் பார்த்தோம். (எதிர்ப்புகளுக்குப் பின்னர் அந்த அறிக்கை திரும்பப் பெறப்பட்டது). இப்படி நாடு முழுவதும் முட்டாள் தனத்தையும் மூடநம்பிக்கையையும் வளர்ப்பதும் பசுவைப் பாதுகாப்பதாகச் சொல்லிக் கொண்டு மனிதர்களை நரபலி கொடுப்பதும் கொலை செய்வதும்தான் சங்கிகளின் ஆட்சிகளில் நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கு ஆதரவாக ஆர்.என்.ரவி போன்றவர்கள் திட்டமிட்டு பொய்ப்பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். அதற்கேற்ப ஒன்றிய பாஜக அரசு, பொதுத் துறையான பிரச்சார் பாரதி நிறுவனத்திற்கு செய்தி கொடுத்துக் கொண்டிருந்த பிடிஐ, யுஎன்ஐ நிறுவனங்களுடன் ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டுவிட்டு, ஆர்எஸ்எஸ் பின்புலம் உள்ள இந்துஸ்தான் சமாச்சார் என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இனி வெறுப்பு, பொய் புரட்டுப் பிரச்சாரங்களும் மூடநம்பிக்கைச் செய்திகளுமே தூர்தர்ஷனிலும் ஆல் இந்தியா ரேடியோவிலும் முதலிடம் பிடிக்கும். இப்படி அனைத்தையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து சனாதனக் கொள்கையைப் பரப்பும் சங்கிகளுக்கு எதிராக இடதுசாரி, முற்போக்கு, ஜனநாயக சக்திகள் ஓர் அணியில் திரள வேண்டும். சமீபத்தில் பாட்னாவில் நடந்து முடிந்த இகக(மாலெ)யின் 11ஆவது கட்சிக் காங்கிரஸ் அதைத்தான் வலியுறுத்துகிறது.* ❑



# இகக(மாலெ) விடுதலை 11வது அகில இந்திய மாநாடு 2023 பிப்ரவரி 15-20, பாட்னா- பீகார்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) விடுதலை கட்சியின் 11வது காங்கிரஸ் (அகில இந்திய மாநாடு) 2023 பிப்ரவரி 15-20 தேதிகளில் நடைபெற்றது. பீகார் தலைநகர் பாட்னா செங்கொடிகளாலும் செம்பதாகைகளாலும் சிவப்பு மயமாக்கப்பட்டிருந்தது. பிப்ரவரி 15 பாட்னாவின் காந்தி மைதானம் மக்கள் திரளால் திணறியது.

பல்லாயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட ஜனநாயகம் காப்போம்-இந்தியாவைக் காப்போம் பேரணி நடைபெற்றது. முதல் நாளில் இருந்தே மக்கள் சாரைசாரையாக வந்து கொண்டிருந்தார்கள். மறுநாள் பிப்ரவரி 16 அன்று மாநாட்டின் பொது அமர்வு காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இகக(மாலெ)விடுதலை கட்சியை உருவாக்கிய தோழர்களில் ஒருவரும் கட்சியின் அரசியல் தலைமைக்குழுவின் மூத்த தோழருமான தோழர் ஸ்வதேஷ் அவர்கள் கட்சிக் கொடியை ஏற்றினார். அதனைத் தொடர்ந்து தியாகிகளுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. தலைவர்கள் ஒவ்வொருவராக அஞ்சலி செலுத்தினார்கள். பாட்னா மாநகருக்கு தோழர் வினோத் மிஸ்ரா நகர் எனப் பெயரிடப்பட்டு, தோழர் ராம் நரேஷ்ராம் பெயரிடப்பட்ட எஸ்.கே.மெமோரியல் அரங்கம் பிரதிநிதித் தோழர்களால் நிறைந்து வழிந்தது. தோழர்கள் டி.பி.பக்ஷி-பி.பி.பாண்டே-என்.கே.நடராஜன் பெயரிடப்பட்ட மேடையில், மாநாடு ஆரம்ப மானது. அஞ்சலித் தீர்மானத்தை தோழர் அபிஜித் முன் வைத்தார். பொது அமர்வில் தோழர் சியாம் சந்திர சவுத்திரி குணால் வரவேற்புரையாற்றினார். வரவேற்புக்குழுவின் சார்பாக பேரா.ஓ.பி.ஜெய்ஸ்வால் உரையாற்றினார். தொடர்ந்து இகக(மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் துவக்கவுரையாற்றினார். தொடர்ந்து நேபாள நாட்டின் முன்னாள் துணைப் பிரதமரும் சிபிஎன்(யுஎம்எல்) கட்சியின் மூத்த தலைவருமான தோழர் ஈஸ்வர் பொக்ரேல், சிபிஐ தேசிய கவுன்சில் செயலாளர் தோழர் பல்லவ் சென்குப்தா, சிபிஐ(எம்) அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் முகமது சலீம், மார்க்சிஸ்ட் ஒருங்கிணைப்புக் குழு பொதுச் செயலாளர் தோழர் ஹல்தார் மகாதோ, புரட்சிகர சோசலிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் மனோஜ், அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் செயலாளர் தோழர் ஜி.தேவராஜன், லால் நிஸான் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பீமாராவ் பன்சாட், இந்திய புரட்சிகர மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் மங்கத்ராம் பஸ்லா, சத்தியசோதக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்புச் செயலாளர் தோழர் கிஷோர் தமாலே ஆகியோர் உரையாற்றினார்கள். இகக(மாலெ) அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் ஸ்வதேஷ் நிறைவுரையாற்றினார். அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ராஜாராம்சிங் நன்றி கூறினார். நிகழ்ச்சியை அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் வீ.சங்கர்

மற்றும் மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் மீனாகுமாரி ஆகியோர் முன்னின்று நடத்தினார்கள்.

அன்று மதிய உணவிற்குப் பின்னர் பிரதிநிதிகள் அமர்வு தொடங்கியது. தோழர் ஜனார்த்தனன் தலைமையில் தோழர் அபிஜித், தோழர் கிருஷ்ணவேணி, தோழர் மைத்ரேயி உள்ளிட்ட 11 பேர் கொண்ட தலைமைக்குழு மாநாட்டை நடத்தியது. பாசிச எதிர்ப்பு மற்றும் தேசியச் சூழல் ஆவணங்களை அறிமுகப்படுத்தி தோழர் திபங்கர் உரையாற்றினார்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகள், விருந்தினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் மாநாட்டினை வாழ்த்தி உரையாற்றினார்கள். குறிப்பாக பிப்ரவரி 17 அன்று காலை மனித உரிமைச் செயற்பாட்டாளரும் எழுத்தாளருமான தோழர் அருந்ததிராய் உரையாற்றினார்.

ஆஸ்திரேலியாவின் சோசலிஸ்ட் அலயன்ஸ் அமைப்பின் சாம் வேன்ரைட், பாலஸ்தீனத்தின் பாய்காட் டிஸ்இன்வெஸட்மென்ட் அண்டு சாங்சன் இயக்கத்தைச் சேர்ந்த அபூர்வா கவுதம், நேபாளத்தில் சிபிஎன்(யுனிஃபைட் சோசலிஸ்ட்) ஜலாநாத் கலால், வெனிசுலா பிஎஸ்யுவி அமைப்பின் மரியா பெர்னான்டா ருய்ஸ், ரமோன் அகஸ்டோ லோபோ, பங்களாதேஷ் ஆர்டபிள்யுபிபி சார்பாக சைபுல் ஹக், பானிசிக்ஷா ஜமால், முகமது அக்பர், மிர் முபசல் ஹோஸ், பெரோஸ் அகமது ஆகியோரும் பங்களாதேஷ் சோசலிஸ்ட் கட்சியின் சார்பாக சம்பா பாசு, மனிஷா சக்ரபோ, முகமது நஸிர் உதின், மசூர் இப்னா ரஹா ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். லண்டனில் இருந்து சவுத் ஏசியன் சாலிடாரிட்டி குரூப் சார்பாக மேரி வில்சன், கல்பனா வில்சன், அனன்யா வில்சன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். விருந்தினர்கள் மற்றும் அழைப்பாளர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அனைவருக்கும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. சர்வதேச சூழல் ஆவணத்தை தோழர் அபிஜித் முன்வைத்தார். சுற்றுச் சூழல் அறிக்கையை தோழர் சுசேதா டே முன்வைத்தார். அமைப்பு வேலை அறிக்கையை தோழர் வீ.சங்கர் முன்வைத்தார். கட்சித் திட்டங்களுக்கான திருத்தத்தை தோழர் அரிந்தம் சென் முன்வைத்துப் பேசினார். அமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை முன்வைத்து தோழர் சுவந்துசென் பேசினார். ஒவ்வொரு தலைப்பின் மீதும் பிரதிநிதி தோழர்கள் தங்கள் கருத்துக்களை முன்வைத்துப் பேசினார்கள். தமிழ்நாட்டில் இருந்து தோழர்கள் சிம்சன், தேசிகன், இராமச்சந்திரன், சுகுந்தன், ஆகியோரும் புதுச்சேரியில் இருந்து தோழர் விஜயாவும் பேசினார்கள். தோழர் மங்கை பாடல் பாடினார். விவாதங்கள் பிப் 19ம் தேதி வரை தொடர்ந்தது. இதற்கிடையே பிப்.18 அன்று 'அரசமைப்புச் சட்டத்தைக் காப்போம்; ஜனநாயகம் காப்போம்; இந்தியாவைக் காப்போம்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த கருத்தரங்கத்தில் பீகார் முதல்வர் நிதிஷ்குமார், துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ், ஐக்கிய ஜனதா தளம் தலைவர் லாலன் குமார், இந்திய தேசிய காங்கிரஸின் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான சல்மான் குர்ஷித் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான தொல். திருமாவளவன், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் தேசியத் தலைவர் ரதிராவ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு உரையாற்றினர். பிப்ரவரி 20 அன்று காலை தோழர் திபங்கர் அறிக்கை மீதான தொகுப்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து தேர்தல் ஆணையக்குழு நியமிக்கப்பட்டு புதிய கட்டுப்பாட்டுக்குழுவிற்கும் புதிய மத்தியக் கமிட்டிக்கும் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பட்டது. 5 பேர் கொண்ட மத்திய கட்டுப்பாட்டுக்குழு தேர்வு செய்யப்பட்டது. அதில் தமிழ்நாட்டில் இருந்து தோழர் கிருஷ்ணவேணி உறுப்பினரான தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் 77 பேர் மத்தியக் கமிட்டிக்கு கட்டுப்பாட்டுக் குழு தலைவர் போக 76 பேர் கலைந்து செல்லும் கமிட்டியால் முன் வைக்கப்பட்டனர். அவையில் இருந்து 6 பேர் போட்டியிட்டனர். ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பட்டு 76 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 77 பேர் கொண்ட புதிய மத்தியக் கமிட்டியால் தோழர் திபங்கர் மீண்டும் பொதுச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார். தமிழ்நாட்டில் இருந்து தோழர்கள் வீ.சங்கர், பாலசுந்தரம், ஆசைத்தம்பி, சந்திரமோகன் புதுச்சேரியில் இருந்து தோழர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் மத்திய கமிட்டியில் இடம் பெற்றுள்ளனர். மிகச் சிறப்பாக பணியாற்றிய தொண்டர்களை பொதுச் செயலாளர் கவுரவித்தார். தேர்தல் ஆணையம், மொழிபெயர்ப்புக் குழு (தமிழ்நாட்டில் இருந்து தேசிகன் இடம்பெற்றிருந்தார்) ஆகியோரது சிறப்பான பணியை தலைமைக்குழு பாராட்டியது. பொதுச் செயலாளர் நிறைவுரையைச் தொடர்ந்து சர்வதேசிய பாடலுடன் மாநாடு நிறைவுற்றது. மிகச் சிறப்பான ஏற்பாடுகளை பீகார் மாநிலக் கமிட்டி செய்திருந்தது. ❑

# ‘ஜனநாயகத்தைக் காப்போம், இந்தியாவைக் காப்போம்’ பேரணி

## 15.02.2023 காந்தி மைதானம், பாட்னா




## அரசியல் தீர்மானம்

*1. பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அதானியின் அரசு சலுகைசார் முதலாளித்துவத்தை ஹிண்டன் பர்க் அறிக்கை அம்பலப் படுத்தியுள்ளது. பாஜகவை ஆட்சியில் தக்க வைக்க, கார்ப்பரேட் நிறுவனங்கள் தேர்தல் பிரச்சாரத்தின் போது பணத்தை வாரி இறைத்தன; பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சாதகமாக கொள்கை மாற்றங்கள் செய்யப்பட்டன; இதில் நாட்டின் ரயில்வே, எஃகு நிறுவனம், வங்கிகள், எல்ஐசி, மற்ற பொதுத்துறை நிறுவனங்களின் விற்பனையும் அடங்கும். இதன் காரணமாகவே, 2014க்கும் ஹிண்டன்பர்க் அறிக்கை வெளியிடப்பட்டதற்கும் இடைப்பட்ட காலக்கட்டத்தில், உலக முதலாளிகளின் பட்டியலில் அதானி, தான் இருந்த 609வது இடத்திலிருந்து 3வது இடத்திற்கு மோசடி வழியில் முன்னேறிச் செல்ல முடிந்தது. அதானி குழுமத்தை பொறுப்பேற்க வைப்பதற்கும் அதன் பொதுப் பங்குதாரர்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கும் பதிலாக, நரேந்திர மோடி அமைதியாக இருப்பதைத் தேர்ந்தெடுத்துள்ளார். காந்தி மைதானத்தில் நடைபெறும் இந்தப் பேரணி, மோடி-அதானியின் கள்ளக் கூட்டை முறியடிக்கும் என சூளுரைக்கிறது. இந்தப் பேரணியின் மூலம், அதானி குழுமத் திற்கு எதிராக நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை நடத்த வேண்டும் என்ற எதிர்க்கட்சி களின் கோரிக்கையை நாங்கள் ஆதரிக்கிறோம்.*

*2. ஒருபுறம் தங்குதடையற்ற கார்ப்பரேட் கொள்ளை, மறுபுறம் அரசியலமைப்புச் சட்டத்தின் மீது முழுமையான தாக்குதல். நாட்டைப் பாதுகாப்போம் என்ற போர்வையில் இந்த நாட்டில் பெரும்பான்மையான மக்கள் குறிவைத்துத் தாக்கப்படுவது துரதிஷ்டவசமானது. இருப்பினும், கார்ப்பரேட் கொள்ளையும் பாசிசமும் ஒன்றோடொன்று ஆழமாகப் பின்னிப் பிணைந்துள்ளன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மத்தியிலும், பல்வேறு மாநிலங்களிலும் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு, பாஜக ஆர்எஸ்எஸ், பல்வேறு ஜனநாயக நிறுவனங்களையும் கைப்பற்றி தங்கள் பாசிசத் தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளன. பிஜேபியின் பாசிசத்தை ஒழித்துக்கட்ட, இந்த நாட்டில் உள்ள அனைவரும் ஒன்றுபட்டு, நமது ஜனநாயகத்தைக் காக்க போராட வேண்டிய நேரம் இதுவாகும். பீகாரில் பாஜக-ஆர்எஸ்எஸ் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்ட போதும், அவர்களை சமூகத்தில் இருந்து முற்றிலும் வேரோடு பிடுங்கி எறியவேண்டியது முக்கிய மானதாகும். இந்த பேரணியின் மூலம், பாசிசத் தாக்குதலை எதிர்க்கவும் நமது இறையாண்மை மிக்க, ஜனநாயக, சோசலிச, மதச்சார்பற்ற குடியரசைப் பாதுகாக்கும் அரசியலமைப்பு நெறிமுறைகளை வலுப்படுத்துவதை உறுதி செய்வதற்கான ஒரு இயக்கத்தை உருவாக்க மக்கள் உறுதி ஏற்கிறார்கள். 2024ல் பாஜக-ஆர்எஸ்எஸ், மோடியை தோற்கடிக்கவும் ஆட்சியதிகாரத்தில் இருந்து அகற்ற, மக்கள் இயக்கங்களை*

வலுப்படுத்தவும் இந்தப் பேரணி உறுதி ஏற்கிறது.

3. சமீபத்திய அசமத்துவ அறிக்கை, நாட்டில் அதிகரித்து வரும் வறுமையையும், கடுமையான அசமத்துவத்தையும் காட்டுகிறது. மோடி ஆட்சியில், உலகளாவிய பசி குறியீட்டில் இந்தியாவின் தரவரிசை கீழிறங்கி, ஏழ்மையான நாடுகளில் ஒன்றாகியுள்ளது. விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், கடன் போன்ற காரணங்களால் தற்கொலைகள் அதிகரித்து வருகின்றன. இந்த ஆட்சியில் கல்வி, சுகாதாரத் துறைகள் கடுமையான சீரழிவைக் கண்டுள்ளன. இந்த கவலைக்குரிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்குப் பதிலாக, மோடி அரசும் பாஜக-ஆர்எஸ்எஸ் அமைப்பும் சமூகத்தை வகுப்புவாத அடிப்படையில் பிளவுபடுத்தவும் இத்தகைய ஒடுக்குமுறைக்கு எதிராக குரல் கொடுக்கும் செயல்பாட்டாளர்களை சிறையில் அடைக்கவும் செய்கிறது. இந்தப் பேரணி, அதிகரித்து வரும் ஒடுக்குமுறையையும் வெறுப்பு அரசியலையும் வன்மையாகக் கண்டிக்கிறது. மேலும் அதிகரித்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு ஆகியவற்றைக் கட்டுப்படுத்த, அரசாங்கம் தலையீடு செய்ய வேண்டுமெனக் கோருகிறது. தரமான, அனைவரும் பெறக்கூடிய குறைந்த கட்டணத்தில் கல்வி, மருத்துவ சுகாதார அமைப்புகளுக்காக, வலுவான இயக்கத்தை கட்டமைக்க மக்களைக் கேட்டுக்கொள்கிறது.

4. சமீபத்திய நிதிநிலை அறிக்கையில், வளர்ந்து வரும் வருமான அசமத்துவத்திற்கு தீர்வுகாணல், பணக்காரர்களுக்கு செல்வ வரி விதித்தல், கார்ப்பரேட் வரியை அதிகரித்தல் அல்லது விலைவாசி உயர்வால் சாமானிய மக்களின் வேதனையை குறைக்கும் ஏற்பாடுகளை உறுதி செய்தல் என்பவற்றுக்கு பதிலாக, மகாஊவேவாதிற்கும், பிற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீட்டை அரசாங்கம் குறைத்துள்ளது. அதன்மூலம் பொருளாதார நெருக்கடியின் போது வேலையில்லாத் திண்டாட்டத்தின் சாத்தியக்கூறுகளை அதிகரித்து, எளிய மக்களைத் துன்பத்தில் தள்ளுவதற்கு வழிவகுத்துள்ளது. இந்த பேரணி மக்கள் விரோத பட்ஜெட் 2023 மீதான தனது கோபத்தை வெளிப்படுத்துகிறது. மேலும், பொது மக்களின் துன்பத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கோருகிறது.

5. உயர் சாதியினருக்கான 10% இடஒதுக்கீட்டை உச்ச நீதிமன்றம் உறுதி செய்ததை இந்தப் பேரணி வன்மையாகக் கண்டிக்கிறது. இதற்கு மோடி அரசாங்கத்தின் மௌன அங்கீகரிப்பையும் எதிர்க்கிறது. இது இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளை மீறுவதாகும். மேலும், ஏதாவது சாக்குப்போக்குகளைக் கூறி, தலித்துகள், மற்ற பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் இடஒதுக்கீடு திருத்தப்படுவதற்கும் நாம் சாட்சியாய் இருக்கிறோம். அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமான பொருளாதாரத்தில் நலிவடைந்தவர்களுக்கான இடஒதுக்கீடு ஒழிக்கப்பட வேண்டும் எனவும், தலித்துகளுக்கும், மற்ற பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கும் இடஒதுக்கீடு அதிகரிக்கப் படவேண்டும் எனவும் இந்தப் பேரணி கோருகிறது.

6. கொடூரச் சட்டங்களின் கீழ் பொய் வழக்குகள் போடப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டுள்ள, அரசியல் கைதிகள், ஊடகவியலாளர்கள், அறிவாளிகள் அனைவரையும் விடுவிக்க வேண்டும் எனவும் வழக்குகளை திரும்பப் பெற்று அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் எனவும் காந்தி மைதானத்தில் இன்று நடைபெறும் இப்பேரணி கோருகிறது.

7. பீகாரில் கடந்த பல ஆண்டுகளாக பாஜக ஆட்சியில் இருந்ததால், ஆட்சி நிர்வாகத்தில் தேவையற்ற செல்வாக்கைக் கொண்டுள்ளது. பாஜக நிர்வாகத்தின் பாசிச தாக்குதல் பீகாரில் இன்னும் பரவலாக உள்ளது. தலித்துகளுக்கும் முஸ்லீம்களுக்கும் எதிராக கட்டவிழ்த்து விடப்படும் புல்டோசர் கலாச்சாரமும், போராட்டக்காரர்களை கைது செய்வதும் ஆளும் பாஜகவின் முக்கிய பாசிசப் போக்குகளாகும். புல்டோசர் கலாச்சாரத்தை எதிர்க்கவும் ஏழைகள், தலித்துகள், முஸ்லிம்களின் வீடுகளை இடிப்பதில் ஈடுபட்ட அதிகாரிகள் அனைவரும் சட்டத்தை மீறியதற்காக தண்டிக்கப்பட வேண்டும் எனவும் ஏற்கனவே நிர்வாகத்தின் அடக்குமுறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்று வசதிகளை வழங்க வேண்டும் எனவும் இந்தப் பேரணி வலியுறுத்துகிறது.

8. பாஜக-ஆர்எஸ்எஸ் கட்டளையின்படி, தேசிய புலனாய்வு நிறுவனம் அப்பாவி முஸ்லிம்களை குறிவைத்து அவர்களை துன்புறுத்தி வருகிறது. தேசிய புலனாய்வு நிறுவனத்தால் முஸ்லிம்கள் குறிவைத்துத் தாக்கப்பட்டு துன்புறுத்தப்படுவதைத் தடுக்க பெருங்கூட்டணி (மகாகத்பந்தன்) அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்தப் பேரணி கோருகிறது.

9. தலித்துகளும், ஏழை மக்களும் அதிக

மின்கட்டணத்தைச் செலுத்தவில்லை என்ற காரணத்தால் குறிவைக்கப்பட்டு, அவர்களின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு தண்டிக்கப் படுவது குறித்து பல செய்திகள் வந்த வண்ண முள்ளன. இந்தக் கவலைகளை இப்பேரணி கவனத்தில் எடுத்துக் கொண்டு, இதனால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் மாநில அரசு மின் இணைப்புகளை திரும்ப ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும், தனது நுகர்வோருக்கு தொல்லைகளை கொடுக்காமல் இருக்க மின் துறைக்கு உத்தரவிட வேண்டும் என்றும் கோரு கிறது.

*10.* மாநிலத்தில் பெண்கள், தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரித்து வருவது மிகவும் கவலைக்குரியது. மாநிலத்தில் பாஜக–ஆர்எஸ்எஸ் மூலம் ஏழைகளைத் தாக்கும் சக்திகள், உள்ளூர் நிர்வாகத்தின் மறைமுக ஆதரவைப் பெற்றுள்ளன. தலித்துகள், பெண்கள், ஏழைகளுக்கு எதிராக அதிகரித்து வரும் தாக்குதல் களைத் தடுக்கும் நடவடிக்கைகளைத் தொடங்கு வதுடன், பாஜகவின் மறைமுக ஆதரவைப் பெற்றுள்ள குற்றவாளிகள், குண்டர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை மாநில அரசாங்கம் எடுக்க வேண்டும் எனவும் இந்தப் பேரணி கோருகிறது.

*11.* இந்தப் பேரணி அனைத்து ஆஷா, மதிய உணவுத் திட்டத் தொழிலாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்களுக்கும் கண்ணியமான மாத ஊதியம் வழங்கக் கோரு கிறது. மேலும், திட்டப் பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாமல் துரோக மிழைக்கும் மோடி அரசாங்கத்தைக் கண்டிக் கிறது. இந்தத் தொழிலாளர்கள் கோவிட் நெருக்கடியின் போது முக்கியப் பங்காற்றி யிருந் தாலும், இவர்களுக்கு சிறப்பு நிவாரணமும், திட்டங்களும் இல்லாதது அரசாங்கத்தின் அக்கறையின்மையையும், தொழிலாளர் விரோத நிலைப்பாட்டையும் காட்டுகிறது. திட்டப் பணியாளர்களுக்கு கண்ணியமான மாத ஊதியம் ரூ.21,000/– வழங்க வேண்டும் என்ற கோரிக் கையை இந்தப் பேரணி வலியுறுத்துகிறது. அதோடு, பீகார் அரசாங்கம் மீதான திட்டப் பணியாளர்களின் ஏமாற்றத்தையும், அவர்களின் கவலைகளையும், பிரச்சினைகளையும் தீர்ப்பதில் அதன் தோல்வியையும் இப்பேரணி சுட்டிக் காட்டுகிறது. விலைவாசி உயர்வு, பணவீக் கத்தின் போது திட்டப் பணியாளர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பல வாக்குறுதிகளையும் மகாகத்பந்தன் அறிக்கை கொண்டுள்ளது.

*12.* பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் உள்ள பகுதி நேர ஆசிரியர்களை முறைப்படுத்த வேண்டும்; அந்த பணிகளுக்கு நீண்டகாலமாக நிலுவையில் உள்ள ஆளெடுக்கும் பணி துவங்கப்படவேண்டும்; அதையும் நியாயமான, வெளிப்படையான முறையில் செய்ய வேண்டும்; இது சிறந்த கல்விச் சூழலை உறுதி செய்வதோடு, பாடத்திட்டங்கள் குறித்த நேரத்தில் முடிக்கப் படுவதை உறுதி செய்யும். கல்வியறிவு பெற்ற இந்தியாவை உருவாக்க, ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கும் கண்ணிய மான சம்பளம் உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் இந்தப் பேரணி கோருகிறது.

*13.* இப்பேரணி கல்வி வணிகமயமாக்கப் படுவதைக் கண்டிக்கிறது. புதிய கல்விக் கொள்கை 2020 திரும்பப் பெறப்படவேண்டும்; அரசுப் பள்ளிகளின் தரம் மேம்படுத்தப் படுவதோடு, பொதுப் பள்ளிக் கல்வி முறையை அமல்படுத்தவும் வேண்டும்; 'சம வேலைக்கு சம ஊதியம்', பள்ளிகளில் பணிபுரியும் ஒப்பந்த ஆசிரியர்கள், இதர திட்டப் பணியாளர்களை நிரந்தமாக்க வேண்டும் எனவும் இப்பேரணி கோருகிறது.

*14.* விவசாயிகளிடம் இருந்து விளை பொருட்களை கொள்முதல் செய்வதற்கு அதிகபட்ச ஆதரவு விலையை சட்டபூர்வ உரிமையாக்குவோம் என்ற வாக்குறுதியை நிறைவேற்றுவதில் மத்திய அரசின் துரோகத்தை இந்தப் பேரணி கண்டிக் கிறது. இந்த விசயத்தில், பொருத்தமான சட்டம் அமல்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அதிகபட்ச ஆதரவு விலை சட்டபூர்வ உரிமையாக் கப்பட வேண்டும்; விவசாயப் பொருட்கள் சந்தைக் குழு சட்டத்தை மீண்டும் அறிமுகப் படுத்த வேண்டும்; மற்ற மாநிலங்களைப் போல விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டும்; ஆகிய விவசாயிகள் இயக்கத்தின் கோரிக்கையை இந்தப் பேரணி மீண்டும் வலியுறுத்துகிறது.

*15.* இந்தப் பேரணி தடா சட்டத்தை விலகிக் கொள்ள வேண்டும் எனவும், மதுவிலக்கு சட்டத் தின் காரணமாக சிறையில் உள்ள அனைவரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் எனவும் கோருகிறது. மக்கள் ஆதரவுப் போராட்டங்களில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ள சட்டப் பேரவை உறுப்பினர்கள் மீதான அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற வேண்டும் என்றும் கோருகிறது. ❑

# இகக(மாலெ)யின் 11வது காங்கிரசின் பொது அமர்வில் பொதுச் செயலாளர் தோழர் திபங்கரின் துவக்க உரை




*மாநாட்டுத் தலைமை தோழரே, பிரதிநிதித் தோழர்களே, பார்வையாளர்களே, இந்தியாவில் உள்ள பல்வேறு இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்களே, வெளிநாட்டில் இருந்து வந்துள்ள சகோதரத்துவ அமைப்புகளின் தலைவர்களே, ஊடக நண்பர்களே, இங்கே கூடியிருக்கும் பாட்னாவின் குடிமக்களே, இகக(மாலெ)யின் 11வது மாநாட்டிற்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாநாட்டில் 27 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் இருந்து, ஆயிரத்து எழுநூறுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகளும் பார்வையாளர்களும் கலந்து கொண்டுள்ளதால், இது நமது கட்சி வரலாற்றில் மிகப்பெரிய காங்கிரஸ் ஆகும். இந்த காங்கிரசுக்காக, பாட்னாவை வினோத் மிஸ்ரா நகர் என்றும், இந்த அரங்கத்திற்கு ராம்நரேஷ் ராம் அரங்கம் என்றும் மறுபெயரிட்டு, நமது இரு பெரும் தலைவர்களுக்கு புகழஞ்சலி செலுத்துகிறோம். மார்ச் 2018-ல் பஞ்சாபின் மான்சாவில் நடைபெற்ற நமது 10வது கட்சி மாநாட்டிற்குப் பிறகு நாம் இழந்த மூன்று மத்தியக் கமிட்டி உறுப்பினர்களான அன்புத் தோழர்கள் டிபி.பக்ஷி, பி.பி.பாண்டே, என்.கே.நடராஜன் நினைவுக்கு இந்த மேடை அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.*

*இந்தக் காங்கிரசை ஒழுங்கமைப்பதில் பீகாரில் உள்ள நீதியை விரும்பும் முற்போக்கு மக்கள் அளித்த அன்பான ஆதரவால் நாங்கள் பெரிதும் ஊக்கமடைகிறோம். காந்தி மைதானத்தில் நேற்று நடைபெற்ற 'ஜனநாயகம் காப்போம்; இந்தியாவைக் காப்போம்' என்ற பேரணியின் வெற்றியில் இது நன்றாக வெளிப்பட்டுள்ளது. இந்த உத்வேகமிக்க எதிர்வினையாற்றிய பீகார் மக்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.*

*இந்தக் காங்கிரசின் தொடக்க அமர்வில், சக இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்களான இகக(மா) தோழர் சலீம், இகக தோழர் பல்லப் சென்குப்தா, பு.சோ.க தோழர் மனோஜ் பட்டாச்சார்யா, அகில இந்திய பார்வர்டு பிளாக் தோழர் ஜி. தேவராஜன், மார்க்சிஸ்ட் ஒருங்கி ணைப்புக் குழு தோழர் ஹல்தர் மஹதோ, மகாராஷ்டிராவின் லால் நிஷான் கட்சியைச் சேர்ந்த தோழர் பீம்ராவ் பன்சோத், இந்திய புரட்சிகர மார்க்சிய கட்சியைச் சேர்ந்த தோழர் மங்கத்ராம் பாஸ்லா, மகாராஷ்டிராவின் சத்யசோதக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் கிஷோர் தாம்லே ஆகிய தலைவர்கள் இங்கு இருப்பது எங்களைப் பெரிதும் கவுரவிக்கிறது. நீங்கள் இங்கு இருப்பது எங்களுக்கு பெரும் ஆதரவாகும். மேலும், தற்போதுள்ள நம்முடைய ஒற்றுமையின் உணர்வையும் ஒத்துழைப்பின் உறவுகளையும் வலுப்படுத்த இது நிச்சயமாக உதவும்.*

நேபாளம், வங்கதேசம் ஆகிய நமது அண்டை நாடுகளிலிருந்தும் மற்றும் ஆஸ்திரேலியா, வெனிசுலா போன்ற தொலைதூர நாடுகளில் இருந்தும் முற்போக்கான கட்சிகள், அமைப்புகள் வெளிப்படுத்தும் சர்வதேச ஒருமைப்பாட்டால் நாங்கள் உத்வேகம் பெற்றுள்ளோம். விசா பிரச்சனையால் இலங்கை, பாகிஸ்தான், ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்து தோழர்கள் வரமுடியவில்லை. ஆனாலும், உலகத்தின் அனைத்து மூலைகளிலிருந்தும் ஒருமைப்பாட்டுக்கான செய்திகள் வந்துள்ளன; வந்துகொண்டே இருக்கின்றன. நமது காங்கிரசை வாழ்த்துவதற்கு பாட்னாவிற்கு வந்திருக்கும் நமது சகோதர விருந்தினர்களுக்கும், ஒருமைப் பாட்டுக்கான செய்திகளை அனுப்பியுள்ள அனைத்து தோழர்களுக்கும் நாம் மிகவும் நன்றி சொல்ல கடமைப்பட்டு இருக்கிறோம். அழிந்துவரும் இன்றைய முதலாளித்துவத்தால் சுமத்தப்பட்டுள்ள உழைக்கும் மக்கள் மீது திணிக்கப்படும் சிக்கன நடவடிக்கை; பாசிசத்தின், சர்வாதிகாரத்தின் புதுப்பிக்கப்பட்ட எழுச்சி; சிறிய, பலவீனமான நாடுகளின் இறையாண்மை மீதான தாக்குதல்கள், ஆக்கிரமிப்புப் போர்கள்; அல்லது நமது பூமியின் இருத்தலுக்கே ஆபத்தை விளைவிக்கும் காலநிலை நெருக்கடி போன்ற எதுவாகட்டும் பல்வகை நெருக்கடிகளிலிருந்தும் உலகை விடுவிப்பதற்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்த, சர்வதேச ஒருமைப்பாடு மற்றும் ஒத்துழைப்பிற்கான உறவுகளை வலுப்படுத்த, நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

தோழர்களே, இந்த தொடக்க அமர்வை நாம் பாட்னாவில் நடத்திக் கொண்டு இருக்கும் போது, திரிபுராவில் அடுத்த சட்டமன்றத்தையும் அரசாங்கத் தையும் தேர்ந்தெடுக்க மக்கள் வாக்களித்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளாக, ஜனநாயகத்தின் மீது, எதிர்க்கட்சி அலுவலகங்கள், செயல்வீரர்கள், ஆதரவாளர்கள் மீது, தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தும் கோரிக்கைகளை எழுப்பும் எதிர்ப்புக் குரல் கொடுக்கும் மக்களின் உரிமைகள் மீது, ஒவ்வொரு நாளும் தாக்குதல்களை திரிபுரா சந்தித்து வருகிறது. திரிபுரா மக்கள் எந்தவித அச்சமும் இன்றி வாக்களித்து, பாஜக ஏற்படுத்திய இந்த பயங்கரத்தின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவார்கள் என நம்புகிறோம்.

மோடி அரசாங்கத்தின் பாசிசத் தன்மையும் முழுமையான தோல்வியும் துரோகமும் அதிகரித்த அளவில் அம்பலமாகி வருவதால், கடும் விரக்தியில் உள்ள இந்த ஆட்சி, மேலதிக வெட்கக்கேடான பொய்களையும் மிரட்டல்களையும் நாடுகிறது. இந்தியாவின் சமூக ஊடகத் தளங்களில் பிபிசி ஒளிபரப்பிய, மோடி கேள்வி என்ற ஆவணப் படத்திலிருந்து எந்தப் பகுதிகளையும் ஒலிபரப்புவதைத் தடுக்க, இந்த அரசாங்கம், இந்தியாவின் கொடூரமான தகவல் தொழில் நுட்பச் சட்டத்தை, அவசரகால அதிகாரங்களை முதலில் பயன்படுத்தியது. பிறகு, டெல்லியிலும் மும்பையிலும் உள்ள பிபிசி அலுவலகங்கள் மீது வருமான வரி சோதனை களைக் கட்டவிழ்த்து விட்டது. பங்குச் சந்தை முறைகேடுகள், கணக்குகளில் மோசடி, பணம் கையாடல் செய்தல் என்று அதானி குழும குற்றங்களை வெளிப்படுத்தி யதன் மூலம், அதானியின் பங்குகளின் விலைகளில் முன்னெப்போதும் இல்லாத சரிவு ஏற்பட்டது. அதானி சொத்தின் நிகர மதிப்பை பெருமளவுக்குக் குறைத்து, அதானியை உலக பில்லியனர்கள் பட்டியலில் மூன்றாவது அதிபணக்கார இடத்தில் இருந்து முதல் பத்து இடங்களில் பின்னுக்குத் தள்ளியது, ஹிண்டன்பர்க் அறிக்கை. இந்த அறிக்கை குறித்து ஒன்றியஅரசாங்கம் வெளிப் படையாக மௌனம் சாதித்து, இந்தியாவின் நிதிக் கட்டுப்பாட்டு அமைப்பின் தோல்வி, மோடி–அதானி கள்ளக்கூட்டின் பிணைப்பு குறித்து எந்த விசாரணையும் செய்ய மறுத்தது. அதானி பற்றிய கேள்விக்கு பதில் சொல்லாமல் மலிவான உணவு, மானிய விலையில் எரிவாயு உருளைகள், நல்ல வீடுகள், உதவித்தொகை ஆகியவற்றை ஏழைகளுக்கு அரசாங்கம் வழங்குவதாகச் சொல்லி, மோடி வெட்கக்கேடான வகையில், தைரியமாக, மக்களை அமைதியுடன் இருக்கும் படி நாடாளுமன்றத்தில் கேட்டுக் கொண்டார். பிஜேபி தற்போது செய்து கொண்டிருப்பது போல, பிபிசி ஆவணப்படத்தை காலனித்துவ சதி என்றும் அதானி அம்பலப்படுத்தப்பட்டதை இந்தியா மீதான தாக்குதல் என்றும் சித்தரிப்பது, தேசியவாதத்தை அப்பட்டமான விசமத்தனமிக்க கேலிக்கூத்தாக ஆக்கியுள்ளது. சமீபத்திய ஆக்ஸ்பாம் அறிக்கை, இந்தியாவில் பெருகி வரும் பொருளாதார சமத்துவமின்மை குறித்து மீண்டும் ஒருமுறை கவனத்தை ஈர்த்துள்ளது. இது, பெரும் பணக்காரர்கள் மீது செல்வம் மற்றும் பரம்பரைச் சொத்துக்கான வரிகளை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியத்தை விளக்குகிறது. இருப்பினும், பெரும் பணக்காரர்க ளுக்கான கூடுதல் வரிச் சலுகைகளை இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அரசாங்கம் அறிவித்த அதே வேளையில், மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், சமூகப் பாதுகாப்பு, பொதுமக்களுக்கான பிற சேவைகள், நலத்திட்ட செலவுகளுக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்துள்ளது.

சாமானிய மக்களின் மோசமான வாழ்நிலை மைகள், பொருளாதாரத் துறையில் அரசாங்கத்தின் மகத்தான தோல்வி ஆகியவற்றுக்கு எதிராக மக்களின் கோபம் வளர்ந்து வருகிறது. அதே வேளையில், வெறுப்பினை பரப்புதல், வகுப்புவாத துருவச் சேர்க்கையை கூர்மையாக்கி, முஸ்லிம் சமூகத்தினரை குறிவைத்தல், முற்போக்கு அறிவாளிகள், மாற்றுக்கருத்துக்கான அனைத்து குரல்கள், நீதி மற்றும் சமூக மாற்றத்துக்காக போராடும் சமூகக் குழுக்களை தேச விரோதிகளாக சித்தரித்தல் ஆகியவற்றின் மூலம் மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவும் சமூக, பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி ஒரு அதிதீவிர தேசியவாத, பாசிச வெறியைத் தூண்டுவதற்கும் மோடி அரசாங்கம் விரும்பு கிறது. மின்சாரம், கழிப்பறைகள், குடிநீர் வசதி ஆகியவை உறுதிசெய்யப்பட்ட அனைவருக்குமான வீடுகள் பற்றிய அனைத்து உயரிய பேச்சுக்களும், வெறியாட்டம் போடும் புல்டோசர்களால் ஏற்கனவே மாற்றப்பட்டு விட்டன. ஆன்மிகக் குருக்கள் போல் வேஷம் போடும் நச்சுப் பிரச்சாரகர்களால் மதக் கூட்டங்கள் என்று அழைக்கப்படும் மேடைகளில் இருந்து இனப்படு கொலைக்கான அழைப்புகள் பகிரங்கமாக வெளியிடப்படுகின்றன.

சட்டமன்றம், நீதித்துறை ஆகியவற்றை வெளிப்படையாக நிர்பந்தித்து அடிபணியச் செய்தும் கவர்னர்கள், பிற நிறுவனங்களின் நியமிக்கப்பட்ட தலைவர்களின் அலுவலகங்களையும் பல்வேறு மத்திய நிறுவனங்களையும் கட்டுப்படுத்தும் கருவிகளாகப் பயன்படுத்தி, மாநிலங்களை புகழ் பாடும் நகராட்சிகளாக மத்திய அரசு கீழ்நிலைப்படுத்துவதன் வழியாகவும் அரசமைப்புச் சட்ட ஆட்சிமுறையின்

அனைத்து நிறுவனங்களும் நிர்வாகத்துறையின் மூலம் திட்டமிட்டு சீர்குலைக்கப்படுகின்றன. குடியுரிமைச் சட்டங்கள், இடஒதுக் கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்களைச் செய்தும் பல்வேறு பிரிவு மக்கள், குறிப்பாக சிறுபான்மை யினர், தொழிலாளர் வர்க்கம், விவசாயிகள், சிறு வணிகர்கள், தலித்துகள், பழங்குடியினர், பெண்கள், இளைஞர்கள் ஆகியோரின் உரிமைகளைப் பறிக்கப்படுகிறது. அரசமைப்புச் சட்டத்திற்குள்ளிருந்து கொண்டே, குழிபறித்து அது கீழ்நிலைப்படுத்தப்படுகிறது. 2023-ல் ஜி20 தலைவர் பதவியை இந்தியா ஏற்றுக்கொண்ட தையும் மத்திய உள்துறை அமைச்சர் அறிவித்த படி, 2024 ஜனவரி 1ஆம் தேதிக்குள் ராமர் கோவில் திறப்பு விழாவையும் கொண்டாடும் முழக்கத்தில், ஜனநாயகம் மற்றும் பன்முகத் தன்மை மீதான தாக்குதல் முன்னெடுக்கப் படுகிறது.

வளர்ந்து வரும் இந்தப் பாசிச வெறியையும் தாக்குதலையும் எதிர்கொள்ள, இந்தியா முழுவதும் உள்ள போராடும் மக்களின் ஒற்றுமையை நாம் வலுப்படுத்த வேண்டும். உடைமையைப் பறித்தல், தனியார்மயமாக்கல் மற்றும் மதவாத, சாதிய, ஆணாதிக்க வன்முறைக்கு எதிராகவும் உணவு, குடியிருப்பு, கல்வி, வேலைவாய்ப்பு, பொதுச் சுகாதாரம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய உரிமைகள் அனைவருக்கும் கிடைத்திட பல வகையான ஆற்றல் மிகு போராட்டங்களைக் கட்டியெழுப்ப, கோவிட் 19 பெருந்தொற்றுக்கு முந்தைய குடியுரிமை சட்டத்திற்கு எதிரான இயக்கத்திலும் கோவிட் காலத்தின் கடுமையான நிலைமைகளை மீறி வளர்ந்த, பேரழிவு தரும் விவசாயச் சட்டங்களை விலக்கிக் கொள்ள மோடி அரசாங்கத்தை நிர்பந்தித்த விவசாயிகள் இயக்கத்திலும், நாம் கண்ட ஒற்றுமையையும், உணர்வுபூர்வமான உறுதிப்பாட்டையும் நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். பாசிசத்தைத் தோற்கடித்து, அரசியலமைப்பைக் காப்பாற்றி, இந்திய மக்களுக்கு ஒரு முற்போக்கான, வளமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டுமென்ற பரவலான அரசியல் விருப்பம், நாடு முழுவதும் உள்ள மக்களின் ஒன்றுபட்ட உறுதியின் அடித்தளத்தில் மட்டுமே வளர்ந்து வெற்றிபெற முடியும்.

இந்த பரவலான வெகுமக்களின் உறுதிக்கு ஊக்கமளித்து, அதனை உயிர்ப்புடன் வைத்து, மதச்சார்பற்ற ஜனநாயகக் கூட்டாட்சி இந்தியா என்ற வேலைத் திட்டத்தை முன்கொண்டு செல்வதில், இடதுசாரிகளான நம் அனைவருக்கும் முக்கிய பங்கு உள்ளது. 2023 இன் நமது முயற்சிகள் 2024 இல் ஜனநாயகத்தின் தீர்மானகரமான வெற்றிக்கு வழி வகுக்கும். மதவாத வெறுப்பு, அரசு பயங்கரவாதம், சட்டத்திற்கு புறம்பான வன்முறை, கார்ப்பரேட் கொள்ளை, சூறையாடல் ஆகியவற்றைத் (திட்டமாகக்) கொண்டுள்ள பாசிச பாஜக-ஆர்எஸ்எஸ் ஆட்சியதிகாரத்தை முடிவுக்குக் கொண்டுவருவது, நிச்சயமாக, 2023 இல் அடுத்தடுத்து நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல்கள் அல்லது 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலைத் தாண்டிய சவாலாகும். அது, அனைத்து முனைகளிலும் நீடித்த, முழுமை யான மக்களின் எதிர்ப்புக்கு அழைப்பு விடுக்கிறது. பாசிசத்தை தோற்கடித்து, ஜனநாயகப் போரில் வெற்றி பெறுவதற்கு அனைத்து இடதுசாரி சக்திகளுக்கும் பரந்த எதிர்க் கட்சிகளுக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமையும் ஒத்துழைப்பும் தேவை. இந்த திசையில் நாம் செல்ல முடியும் என்பதில் உறுதியாக இருக்கி றோம்.

நமது 11வது மாநாடு இன்றைய காலச் சூழலின் தேவைக்காக முழுமையாக அர்ப்பணிக் கப்பட்டுள்ளது. அரசியல் தீர்மானம் மற்றும் அமைப்பு அறிக்கை பற்றிய விவாதங்களைத் தவிர, நமது 11வது காங்கிரசின் நிகழ்ச்சி நிரலில் இரண்டு குறிப்பிட்ட தீர்மானங்கள் ஒன்று பாசிச எதிர்ப்பு போராட்டத்தின் நோக்கு நிலை, பணிகள், மற்றொன்று சுற்றுச்சூழல் பாதுகாப்பும், காலநிலை நீதிக்கான வேலைத் திட்ட மும் உள்ளன. இந்திய இடதுசாரி இயக்கத்திலும், உலகளாவிய முற்போக்கு முகாமிலும் உள்ள அனைத்து தோழர்களுக்கும் உங்கள் ஆதரவுக்கும் ஒருமைப் பாட்டுக்கும் நாங்கள் மனபூர்வமாக நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், வரும் நாட்களில் ஒருமைப்பாட்டுக்கும், ஒத்துழைப்புக்குமான நெருக்கமான உறவுகளை எதிர்நோக்குகிறோம். இந்திய அரசு அதிகாரத்தில் இருந்து மட்டுமல்ல, வலதுசாரி சக்திகளின் உலகளாவிய ஒருங்கிணைப்பு, இந்தியாவின் சமூக அமைப்பு, கலாச்சார பழக்கவழக்கங்கள் மற்றும் அரசியல் வரலாற்றின் அனைத்து பிற்போக்கு அம்சங்களிலிருந்தும் பாசிஸ்டுகள் தங்கள் வலிமையைப் பெறுகிறார்கள். இந்த பாசிச வடிவமைப்பை முறியடிக்க, இந்திய விடுதலை இயக்கத்தின் முற்போக்கான மரபை உயர்த்திப் பிடித்து, நீதிக்கும், சமத்துவத்திற்காகவும் நடைபெறும் பெரும் போர், பல்வகைப்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு, பாசிச எதிர்ப்பு சக்திகளிடையே சர்வதேச ஒருமைப்பாடு உருவாக்கப் பட வேண்டும். உங்களின் ஆதரவுடன் 11வது மாநாடு எங்களை இந்தப் பயணத்தில் முன்னெடுத்துச் செல்லும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

உலகின் முற்போக்கு சக்திகளுக்கு மேலும் பலம் கிட்டட்டும்! போராடுவதற்காக நாம் ஒன்றுபடுவோம்! வெற்றிகிட்டும் வரை போராடுவோம்! இன்குலாப் ஜிந்தாபாத்! புரட்சி வாழ்க! ❑

## இந்துத்துவ பாஜக ஆட்சிக்கு எதிரான உண்மையான மாற்று இடதுசாரிகள்தான்

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் முகமது சலீம் ஆற்றிய உரையிலிருந்து)

*பஞ்சாபில் நடைபெற்ற 10ஆவது காங்கிரஸிலிருந்து இப்போது நடைபெறும் 11ஆவது காங்கிரஸ் வரை நாங்கள் உங்களோடு இருக்கிறோம். ஒன்றிய மோடி ஆட்சியில் அரசமைப்புச் சட்டத்தின் மீதான, குடிமக்களின் ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதல் அதிகரித்திருக்கிறது. தொழிலாளர் வர்க்க விரோத, கார்ப்பரேட் ஆதரவுக் கொள்கைகளை இந்த அரசாங்கம் மிகவும் வெளிப்படையாக அமலாக்கம் செய்து வருகிறது. 4 தொழிலாளர் சட்டத் தொகுப்புகளும் கடும் போராட்டத்தின் விளைவாக ரத்து செய்யப்பட்ட 3 வேளாண் சட்டங்களும் கார்ப்பரேட் ஆதரவு சட்டங்களுக்கான உதாரணங்களாகும். வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு, வறுமையால் மக்கள் துயரப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு கூட கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது. சிறுபான்மை மக்களது குடியுரிமை மறுக்கப்படுகிறது. குடியுரிமை திருத்தச் சட்டம், காதல் ஜிகாத், புல்டோசர் ராஜ்ஜியம் ஆகியவை முஸ்லிம் மக்கள் மீதான நேரடி தாக்குதல்களாகும். பிற்போக்கு மனுவாத செயல் திட்டம் பெண்களை குறி வைத்துத் தாக்குகிறது. இந்த இந்துத்துவ கார்ப்பரேட் ஆட்சியை எதிர்கொள்வது இடதுசாரிகள் முன்னுள்ள மிகப்பெரிய சவால். இந்த ஆட்சியதிகாரத்தின் மீதான நமது எதிர்ப்பை பலமாக கட்டி எழுப்ப வேண்டியுள்ளது. குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிரான வெகுமக்கள் போராட்டமும் வேளாண் சட்டத்துக்கு எதிராக நடந்த போராட்டங்களும் சிறந்த உதாரணங்களாக உள்ளன. தனியார்மயத்துக்கு எதிராக தொழிலாளர்களும் விடாப்பிடியாக போராடி வருகிறார்கள். இந்துத்துவாவின் தாக்குதலை எதிர்கொள்வதிலும் அனைத்து ஜனநாயக சக்திகளையும் ஒன்றிணைப்பதிலும் இடதுசாரிகளுக்கு முக்கிய பாத்திரம் உள்ளது. இந்துத்துவ கார்ப்பரேட் பாஜக ஆட்சிக்கு எதிராக உண்மையான மாற்று என்பது இடதுசாரிகள் தான். அதை நோக்கிய பயணத்தில் ஒரு படியாக இந்த மாநாட்டை நான் பார்க்கிறேன். உங்களது மாநாடு வெற்றி பெற எங்களது தோழமை வாழ்த்துகள். ❑*

## கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஒற்றுமை காலத்தின் தேவையாக உள்ளது

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கவுன்சில் செயலாளர் தோழர் பல்லவ் சென்குப்தா உரையிலிருந்து)

*தோழர்களே! கம்யூனிஸ்ட் கட்சிகள் பெரும் நிலவுடைமைக்கெதிராக, நிலப்பிரபுத்துவத்திற்கெதிராக, ஆணாதிக்கத்துக்கெதிராக மிகப்பெரிய போராட்டங்களை நடத்தியுள்ளன. இந்தப் போராட்டங்களில் தங்கள் இன்னுயிரை இழந்த தியாகிகளுக்கு என்னுடைய செவ்வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலக வரலாற்றில் முக்கியமான தருணத்தில் உங்கள் மாநாடு நடைபெறுவதால் அது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. மனித குலத்தின் கருவான கொள்கைகள் சவாலுக்கு உட்படுத்தப்படுவதை நாம் எதிர்கொண்டு வருகிறோம். முடிவே இல்லாத முதலாளித்துவ பேராசை, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு மற்றும் பாசிசம் ஆகியவற்றை நாம் எதிர்கொள்கிறோம். சமூகநீதி சீர்குலைக்கப்படுகிறது. சுற்றுச் சூழலும்கூட அச்சுறுத்தப்பட்டு வருகிறது. கடந்த 9 ஆண்டுகளாக நமது மதச்சார்பற்ற சோசலிச குடியரசு முற்றுகையிடப்பட்டிருக்கிறது. சுதந்திரப் போராட்டத்தில் கருவாக இருந்த அத்தனை கொள்கைகளுக்கும் எதிரான சக்திகள் ஆட்சி அதிகாரத்தில் உட்கார்ந்திருக்கின்றனர். காவி ஏதேச்சதிகாரம், சகிப்புத்தன்மையற்ற தாகவும் வெறுப்பு கொண்டதாகவும் உள்ளது. சமூகத்தின் அனைத்துப் பிரிவு மக்களும் வீதிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். மோடி 'அமிர்தகாலம்' என்பதை முன்னெடுத்துக் கொண்டிருக்கும்போது, நாட்டில் வறுமையும் ஏற்றத்தாழ்வும் தலைவிரித்தாடுகிறது. நாடு பல்வேறு வளர்ச்சிக் குறியீடுகளில் பின்தங்கி உள்ளது. இந்த அரசாங்கத்தை கேள்வி கேட்பவர்கள் தொடர்ந்து தாக்குதலுக்குள்ளாக்கப்படுகிறார்கள். அனைத்து பிரிவு மக்களையும் உள்ளடக்கிய இந்தியா என்பது இப்போது நிர்மூலமாக்கப்பட்டிருக்கிறது. உங்கள் அரசியல் தீர்மான நகல் ஆவணத்தை நான் முழுமையாகப் படித்துப் பார்த்தேன். உங்கள் கணிப்புகளோடு நான் முழுவதுமாக உடன்படுகிறேன். விஜயவாடாவில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது காங்கிரஸ், "இந்தச் சூழலில் மத்தியிலும் பல்வேறு மாநிலங்களிலும் மதச்சார்பற்ற ஜனநாயக மாற்றணியை வளர்த்தெடுக்க பரந்த மதச்சார்பற்ற இடதுசாரி சக்திகளின் கூட்டணியை உருவாக்குவது அவசர அவசியமானது" என்று முடிவு செய்திருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஒற்றுமையும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையே இன்னும் பரந்த ஒருங்கிணைப்பும் காலத்தின் தேவை. மாநாடு வெற்றி பெற எங்களுடைய வாழ்த்துக்கள்!*

*தோழர் கோசிமின்னின் முழக்கத்தை கூறி நிறைவு செய்கிறேன். ஒற்றுமை!ஒற்றுமை! மிக உயர்ந்த ஒற்றுமை!!*

*வெற்றி! வெற்றி! மிக உயர்ந்த வெற்றி!!*

# மக்கள் இயக்கங்களால் பாசிசத்தை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது

(புகழ் பெற்ற எழுத்தாளர் அருந்ததிராய் உரையிலிருந்து)

*கேரளாவில் உள்ள எனது நண்பர்கள் பாஜகவை 'பெரிய பூஜ்ஜியம்' என்று குறிப்பிட்டு எனக்கு ஒரு செய்தி அனுப்பியிருந்தார்கள். அதிலிருந்து எனது உரையை துவக்குகிறேன். வேளாண் சட்ட எதிர்ப்புப் போராட்டங்களில் கையாளப்பட்ட பிரசித்தி பெற்ற வாசகம் "நான்கு பேர் நாட்டை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள். இருவர் (மோடி-அமித்ஷா) நாட்டை விற்கிறார்கள், இருவர் (அதானி-அம்பானி) அதை வாங்குகிறார்கள்" என்பதாகும். ஐரோப்பாவின் பல்வேறு காலகட்டங்களில் இருந்த பாசிசத் தோடு இந்தியாவில் தற்போதுள்ள பாசிசத்தை நாம் ஒப்பிட முடியும். ஆனால், இரண்டு வகை பாசிசத்திற்கும் உள்ள ஒரே வித்தியாசம். இங்கு சாதி என்ற வடிவம் இருப்பதுதான். சாதி ஒழிப்புப் போராட்டத்தில் முதலாளித்துவ எதிர்ப்பு என்ற அம்சம் இல்லாமலும் அதேபோல் முதலாளித்துவ எதிர்ப்புப் போராட்டத்தில் சாதி எதிர்ப்பு என்ற அம்சம் இல்லாமலும் அவை வெற்றி பெற முடியாது என்று நான் நம்புகிறேன். கடந்த காலங்களில் சாதிய வன்கொடுமையிலிருந்து தப்பிக்க பலரும் இஸ்லாமுக்கு, கிறித்துவத்திற்கு இன்னும் மற்ற மதங்களுக்கு மதம் மாறிக் கொண்டார்கள். அதேபோல் பஸ்மன்டா முஸ்லிம் மக்களும் மதம் மாறியவர்களே. இன்று மீண்டும் இந்த மக்கள் மீது வன்முறை ஏவி விடப்படுகிறது. அவர்கள் கொலை செய்யப்படுகிறார்கள். கும்பல் படுகொலைக்கு ஆளாகிறார்கள். நாட்டின் 60% சொத்துக்கள் 5% பேரின் கைகளில் உள்ளது. 1990 காலகட்டத்தில் இரண்டு பூட்டுகள் திறக்கப்பட்டன. ஒன்று பாபர் மசூதிக் கதவு. மற்றொன்று இந்திய சந்தை. இந்த இரண்டு சம்பவங்களின் மிகப்பெரிய தாக்கத்தை இன்றளவும் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஆனாலும் நாட்டின் மக்கள் மீது எனக்கு மிகப்பெரிய நம்பிக்கை உண்டு. மக்கள் பல வடிவங்களில் தங்களின் மிகப்பெரிய எதிர்ப்பைக் காட்டி வந்திருக்கிறார்கள். அது தொடரும் என்பதிலும் பாசிசம் தோற்கடிக்கப் படும் என்பதிலும் எனக்கு நம்பிக்கை உண்டு.* ❑

# சர்வதேச கம்யூனிச விவாதங்களில் சிபிஐ(எம்எல்) கட்சியால் நிறைய பங்களிப்பு செலுத்த முடியும்

(ஆஸ்திரேலியாவின் சோசலிச கூட்டணி அமைப்பின் தோழர் ஷாம் உரையிலிருந்து)

*சிபிஐ(எம்எல்) கட்சியின் 11ஆவது கட்சிக் காங்கிரசுக்கு எங்களுடைய ஒருமைப்பாட்டை தெரிவித்துக் கொள்கிறோம். எங்களை மாநாட் டிற்கு அழைத்தமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். கொல்கத்தா தோழர்களின் உபசரிப்புக்கு எங்களுடைய சிறப்பு நன்றியை தெரிவிக்கிறோம்.*

*1990களின் ஆரம்ப காலத்திலிருந்து எங்க ளுக்கு உங்கள் கட்சியுடனான உறவு இருந்து வருகிறது. 25 ஆண்டுகளுக்கு முன்பு தோழர் திபங்கர், ஆஸ்திரேலியா வருகை புரிந்ததை நினைவு கூர்கிறேன்.*

*தோழர்களே! ஆஸ்திரேலியா செல்வ செழிப்பு மிக்க ஏகாதிபத்திய நாடுதான். அப்படி யெல்லாம் இருந்தும் அங்கே முதலாளித்துவம் மக்களுக்கு சொல்லொன்னா துயரத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அங்கே குடியிருப்பும் விலைவாசி உயர்வும் மிகப்பெரிய பிரச்சினைக ளாகும். குடியிருக்க வீடு இல்லாமல் இருப்பது ஆஸ்தி ரேலிய மக்களின் பெரும் கவலையாகும். எங்கள் நாட்டின் மூல வளங்களை பெரும் முதலாளிகள் சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக் கிறார்கள். சமீப காலத்தில் ஆஸ்திரேலியாவின் சுரங்க உரிமைக்கான போட்டியில் அதானியும் இணைந்து கொண்டிருக்கிறார்.*

*அடுத்து நான் சொல்ல விரும்பும் இரண் டாவது செய்தி, ஐக்கிய அமெரிக்கா சீனாவுக்கு எதிரான பரப்புரையையும் சீனா மீதான பொருளாதார, இராணுவ யுத்தத்தையும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பது. சீனா மீது ஐக்கிய அமெரிக்கா நடத்தி வரும் யுத்தத்துக்கு எதிராக அனைத்து முற்போக்கு சக்திகளும் ஒன்றி ணைந்து நிற்க வேண்டும்.*

*சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் நடந்து வரும் பல்வேறு விவாதங்களுக்கு சிபிஐ(எம்எல்) கட்சியால் நிறைய பங்களிப்பு செலுத்த முடியும் என நாங்கள் நம்புகிறோம். ஆஸ்திரேலிய-இந்திய மக்களுக்கிடையிலான ஒத்துழைப்பிற்கான களமாக ஆசியபசிபிக் பிராந்தியம் அமையும் என நாங்கள் நம்புகிறோம்.* ❑

# அரசமைப்புச் சட்டத்தைக் காப்போம்; ஜனநாயகம் காப்போம்; இந்தியாவைக் காப்போம்; கருத்தரங்கம்




இகக(மாலெ) 11வது அகில இந்திய மாநாட்டின 3ம் நாளான 18.2.2023 அன்று 'அரசமைப்புச் சட்டத்தைக் காப்போம்; ஜனநாயகம் காப்போம்; இந்தியாவைக் காப்போம்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த கருத்தரங்கத்தில் பீகார் முதல்வர் நிதிஷ்குமார், துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ், ஐக்கிய ஜனதா தளம் தலைவர் லாலன் குமார், இந்திய தேசிய காங்கிரஸின் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான சல்மான் குர்ஷித் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான தொல். திருமாவளவன் உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர். கருத்தரங்கின் நோக்கம் குறித்து முதலில் உரை நிகழ்த்திய இகக(மாலெ) பொதுச் செயலாளர் திபங்கர், கருத்தரங்கத்தில் கலந்துகொண்ட தலைவர்கள் அனைவரையும் வரவேற்றார். அவர் தனது உரையில், இந்த கருத்தரங்கத்தின் நோக்கம் மிகத் தெளிவானது "அரசமைப்புச் சட்டமும் ஜனநாயகமும் ஆபத்தில் இருக்கிறது என்றால், அவற்றை பாசிச சக்திகளிடமிருந்து பாதுகாக்க உறுதியான போராட்டமும் பரந்த ஒற்றுமையும் தேவை". மேலும் அவர், தெருக்களிலும் தேர்தல் களத்திலும் எதிர்ப்பானது எவ்வாறு கட்டமைக் கப்படுகிறது என்பதை மீண்டும் மீண்டும் பீகார் காட்டுகிறது. பொதுச் செயலாளர் தொடர்ந்து, 11வது அகில இந்திய மாநாட்டின் ஒரு பகுதியான இந்தக் கருத்தரங்கம், நாட்டில் நெருக்கடி நிலையைப் போன்ற ஒரு சூழலுக்கு எதிரான எதிர்ப்பை கட்டமைப்பதற்கான ஒரு தெளிவான அழைப்பு ஆகும். என்றார்.

கருத்தரங்கத்தில் திரளராகக் கூடியிருந்த மக்கள் மத்தியில் பேசிய பீகார் முதல்வர் நிதிஷ்குமார், தற்போதுள்ள ஆட்சியான தன்னுடைய சொந்த நலனுக்காகவே வேலை செய்கிறது. அதற்கெதிராகப் போராட, நாட்டின் நலனுக்காக, பாஜக கூட்டணியிலிருந்து வெளியே வந்து, ஏழு கட்சிகள் ஒன்றிணைத்திருக் கிறோம். மேலும் "மகா கூட்டணி நோக்கிய நம்முடைய முடிவானது மக்களிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. ஆகையால், நாம் இதுபோல் தொடர்ந்து ஒன்று சேர்ந்து செயலாற்றுவோம். ஆனால், பீகார் தாண்டியும் பொறுப்புகள் இருக்கின்றன. 2024ல் தேர்தல் வரவிருக்கிற இத் தருணத்தில், நாம் ஒன்று சேர்ந்து போராடி, இப்போது இருக்கும் (ஒன்றிய) ஆட்சியை வெளியேற்றுவோம்" என்று கூறினார். நாங்கள் போராட்டங்களிலும் இகக(மாலெ) மக்களுடனும் ஒன்றுசேர்ந்து செயல்பட்டு வருகிறோம். வரும் காலத்திலும்கூட நாங்கள் அவ்வாறு இருப்போம் என்று உறுதியளிக் கிறோம். நாம் தொடர்ந்து இணைந்து வேலை செய்வோம் என்று கூறினார்.

பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ்,

பல கருத்துக்களும் இங்கே ஏற்கனவே பகிரப் பட்டு விட்டன. இருந்தாலும் இந்த மேடையில் ஜனநாயகத்தைக் காப்போம் என்ற முக்கியமான முழக்கம் வைக்கப்பட்டிருக்கிறது அதன் மீது சில கருத்துக்களை சொல்கிறேன்.

நாம் பணவீக்கம், வேலை வாய்ப்பு, உணவு பாதுகாப்பு பற்றி பேசிக்கொண்டிருக்கும் போது, மோடியின் ஊடகம் பசுமாடு, இஸ்லாமியர், கோவில் பற்றி பேசிக் கொண்டிருக்கிறது.

அன்பு, அமைதி பற்றி எந்த பேச்சும் இல்லை. பதிலாக வெறுப்பும் வன்முறையும் அவர்களு டைய மொழியாக இருக்கிறது. ஏற்கனவே சிந்தனை கொத்து என்ற நூலில் இந்தியாவை ஒரு இந்து நாடு என்று கோல்வால்கர் எழுதியிருக் கிறார்.

இந்தியாவின் ஜனநாயக சக்திகள் மீது அனைத்து ஒடுக்கு முறையும் ஏவப்படும் போதும் நீங்கள் போராடிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் அரசியல் சாசனத்தை பாதுகாப்பதற்காக போராடிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நிதீஷ் குமார் முக்கிய முடிவை எடுத்து நம்மோடு இணைந்து இருக்கிறார். அவருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சி ஒற்றுமை வரும்போது காங்கிரஸ் தேசிய கட்சியாக இருக்கிறது.நாங்கள் பிராந்திய கட்சிகள்.பாஜகவை அகற்றுவதற்கு ஒரு திட்ட வரைபடத்தை நாம் உருவாக்க வேண்டும். காங்கிரஸ் இவ்விசயத்தில் முடிவு எடுக்க வேண்டும். இந்தியா முழுக்க ஆட்சியைப் பிடிக்க எந்த மருந்தைக் கொடுப்பார்களோ அதே மருந்தை பீகாரில் நாங்கள் கொடுத்தோம். எங்கு பிராந்திய கட்சிகள் வலுவாக உள்ளதோ அங்கு ஓட்டுனர் இருக்கை அவர்களுக்கு கொடுக்க வேண்டும். காங்கிரசுக்கும் பாஜகவுக்கும் நேரடி போட்டி இருக்கும் போது காங்கிரஸ் இருக்கட்டும். எமக்கு செலவழிக்க அம்பானி அதானி கிடையாது. எதிர்க்கட்சிகள் மீது தாக்குதல் நடத்திட நாம் அரசு நிறுவனங்களைத் தவறாகப் பயன்படுத்துவது மில்லை. இருப்பினும் நம் மீது தாக்குதல் தொடுக்கப்படுகிறது. பாஜகவுக்கு ஒரு பாடம் கற்றுக் கொடுப்பதற்காக நாமெல்லாம் ஒன்று சேர்ந்தோம். நாட்டின் நலனை முன்னிட்டு ஒரு ஒற்றுமையை நிறுவியுள்ளோம். லல்லு பிரசாத் சார்பாக எனது வாழ்த்துக்கள். இஸ்லாமியர் களுக்கு எதிரான அவர்களது அரசியல் எடுபடாது. ஏனென்றால் இந்த நாடு ஒரு சிலருக்கானதல்ல. இந்த மாநாட்டுக்கு என்னை அழைத்தமைக்கு நன்றி என்று கூறியதோடு, உரையைத் துவங்கும் போது லால் சலாம் என்று கூறியதுபோலவே லால் சலாம் என்று கூறி தனது உரையை முடித்தார்.

இந்திய தேசிய காங்கிரஸின் மூத்த தலைவரும் ஒன்றிய முன்னாள் அமைச்சருமான சல்மான் குர்ஷித் தனது உரையில், தேஜஸ்வி சிவப்பு என்று சொன்னார். அது எனக்கு ஒரு கவிதையை நினைவுபடுத்துகிறது. அது உணர்வு களில் எதிரொலிக்கிறது. அனைத்து சிவப்புக ளையும் கண்டுபிடிக்கிறது. அந்த சிவப்பில் நானும் என்னை சிவப்பாகக் கண்டேன்.

சிவப்பு.. சிவப்பு.. சிவப்பு என்பது புரட்சியின் நிறம். நாட்டில் சிலர் குஜராத் மாடல் பற்றி பேசுகிறார்கள். முதலமைச்சர் நிதீஷ் இப்போதுதான் பீகார் மாடல் குறித்து பேசினார். அது ஒற்றுமைக்கான மாடல். அது அனைவ ரையும் அரவணைத்துச் செல்கிறது. நாம் இந்த மாடலைப் பற்றிதான் இனி பேசியாக வேண்டும். நிதீஷ் குமார் என்ன பேசுகிறார், என்ன விவாதிக்கிறார் என்பதை நாம் கேட்டோம். எங்களின் கட்சியும் இதையேதான் பேசிக் கொண்டிருக்கிறது. நாம் ஒன்றுபோல் உணர்கிறோம். சில சமயம் யார் முதலில் 'ஐ லவ் யூ' சொல்வது என்று பிரச்சனைகூட வரும்.

உங்கள் அனைவரின் ஆதரவையும் பெற்ற, நீங்கள் அவ்வப்போது கலந்துகொண்ட பாரத் ஒற்றுமைப் பயணம் உங்களுக்கு ஒரு செய்தியை அளித்தது. 'இதயங்களை இணைக்க வேண்டும். அன்பைப் பரப்ப வேண்டும்' என்பதுதான் அந்த செய்தி. நாம் இன்று எதிர்கொள்வது பாசிச சக்திகளை. ஆனால், அவர்கள் தைரிய மிக்கவர்கள் அல்லர். அவர்கள் கோழைகள். நமது ஐக்கியம் அவர்களைக் கலவரப்படுத்தி விடும், பின்வாங்க வைத்துவிடும்.

என்னை இங்கே அழைத்ததால் நான் மகிழ்ச்சியடைகிறேன். நாட்டின் ஜனநாயகத் துக்காகப் பேராடிய தலைவர்கள் மத்தியில் இருப்பதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். அவர்களின் உணர்வுகளை நானும் பிரதிபலிக் கிறேன். நம்பிக்கை ஒளியை ஏற்றுங்கள். ஒன்றுபடுங்கள். நாம் ஒன்றுபடுவோம். கொண்டாடுவோம்.

மதவெறியோடு எந்த சமரசமும் செய்யாமல் அதனை எதிர்த்து நிற்க வேண்டும். ஒரு சுனாமி போல இந்திய ஜனநாயகத்தை பாசிசம் தாக்கியுள்ளது. என்று நாடாளுமன்ற உறுப்பி

னரும், தமிழ்நாட்டின் விடுதலை சிறுத்தை கட்சியின் தலைவருமான தொல் திருமாவளவன் கூறினார். பீகாரில் கட்டப்பட்டுள்ள பாசிச எதிர்ப்பு சக்திகளின் பரந்துபட்ட ஒற்றுமையைத் தொடர்வது என்ற நோக்கத்தில் கருத்தரங்கு நடை பெற்றது. இதுபோன்ற போராட்டங்களின் வழிகாட்டியாக வரலாற்று ரீதியாகத் திகழ்ந்துள்ள பீகார், மிகப் பரந்துபட்ட பாசிச எதிர்ப்பு இயக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் கட்டமைக்க வழிகாட்டும்.

இகக(மாலெ) பீகார் சட்டமன்றக் குழுவின் தலைவரான மகபூப் ஆலம், இகக(மாலெ) கட்சியின் பீகார் சட்டமன்ற உறுப்பினர்கள் சத்தியதியோ ராம், கோபால் ரவிதாஸ், இகக(மாலெ) கட்சியின் பீகார் மாநில செயலாளர் குணால், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் தேசியத் தலைவர் ரதிராவ், மற்ற பிறரும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். ❑

## கருத்தரங்கில் மக்களவை உறுப்பினர், விசிக தலைவர், தோழர் தொல்.திருமாவளவன், ஆற்றிய உரையின் சுருக்கம்



சிபிஐஎம்எல் கட்சியின் இந்த மாநாடு வெற்றியடைய வாழ்த்துகிறேன். இந்த மாநாட்டில் எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எங்களது விடுதலை சிறுத்தைகள் கட்சி புரட்சிகர சிந்தனையாளர் மார்க்ஸையும் பின்பற்றுகிறது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இடதுசாரி கட்சி என்று பறைசாற்றிக் கொள்கிறது. நான் அம்பேத்கர், பெரியார் கருத்துக்களை உள்வாங்கியது போலவே மார்க்ஸ் கருத்துக்களையும் உள்வாங்கி இருக்கிறேன். 10 ஆண்டுகளுக்கு மேலாக தேர்தலில் பங்கு பெறாமல் சமூக மாற்றத்திற்கான இயக்கமாக மட்டுமே இருந்து வந்தோம். இன்று எங்களுக்கு 4 எம்எல்ஏக்கள் 2 எம்பிக்கள் உள்ளனர். அனைத்து தென் மாநிலங்களிலும் எங்களுக்கு கிளைகள் உள்ளன. ஆந்திரா, தெலுங்கானா உட்பட சிபிஐஎம்எல் உள்ளிட்ட இடதுசாரி கட்சிகளுடன் சேர்ந்து செயல்படுகிறோம்.

நாம் பாசிசத்தின் முக்கிய கூறுகளை கணக்கில் கொள்ள வேண்டும். பாசிச சர்வாதிகாரத்தின் வடிவங்களையும் கணக்கில் கொள்ள வேண்டும் என்பது டிமிட்ரோவின் கருத்து. சனாதன சங்பரிவார சக்திகளை பாசிசத்தின் வடிவமாக நாம் பார்க்கலாம். இது ஜனநாயகத்தை ஒழித்துக் கட்டி கும்பல் படை ஆட்சியை (mobocracy) வளர்க்கும்.

பெரும்பான்மை வாதமும் அரசு சலுகை சார் முதலாளித்துவமுமே மோடி ஆட்சியின் அடிப்படை கட்டமைப்பாக இருக்கிறது. இந்தியாவின் வளர்ச்சி அவர்களின் லட்சியமாக இல்லை. நாடாளுமன்ற ஜனநாயகத்தை ஒழித்துக் கட்டுவது அவர்களின் இலக்காகும். அவர்கள் பொருளாதார சுயசார்பை மறுத்து ஒரு சிவில் இராணுவத்தை உருவாக்கி தங்கள் பிடிக்குள் வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள்.

எல்லா நிறுவனங்களும் மோடி ஆட்சியின் உபகரணங்களாக மாற்றப்பட்டுள்ளன.

தன் எழுச்சியான போராட்டங்களுக்கு அரசியல் வடிவம் கொடுத்து வழி நடத்தும் பொறுப்பு இடதுசாரிக் கட்சிகளுக்கு உள்ளது.

சமரசத்திற்கு இடமில்லாமல் மத வெறியை நாம் உறுதியாக எதிர்க்க வேண்டும். இந்திய ஜனநாயகத்தை பாசிசம் ஒரு சுனாமி போல் தாக்கிக் கொண்டிருக்கிறது. பெரும்பான்மை பெற்ற அரசாங்கம் பெரும்பான்மை வாத அரசாங்கமாக இயங்க விரும்புகிறது.

நிக்கோலஸ் போலணாட்ராஸ் பாசிசத்தின் மூன்று முக்கிய அம்சங்களாக கட்சி ,குடும்பம், பிரச்சாரம் ஆகியவற்றை இனம் காட்டினார். இந்த ஆட்சியில் ஊடகம், ஆட்சியில் இருப்பவர்களின் பிரச்சார சாதனமாக மாற்றப்பட்டுள்ளது" என்றும் அவர் கூறினார். ❑

**இகக(மாலெ)யின் 11ஆவது கட்சிக் காங்கிரஸ் 2023 பிப்ரவரி 15–20 தேதிகளில் பீகார், பாட்னாவில் நடைபெற்றது. அதன் காரணமாக 'மாலெ தீப்பொறி' 2023 பிப்ரவரி 16–28 இதழ் வெளிவரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம் – ஆசிரியர்**

# ‘அரசமைப்புச் சட்டத்தைக் காப்போம்; ஜனநாயகம் காப்போம்; இந்தியாவைக் காப்போம்’ கருத்தரங்கத்தில் பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் பேசியது



இந்த நிகழ்வினானால் மகிழ்ச்சியடைகிறோம். எங்களின் கட்சி அகில இந்திய மாநாட்டின் போது எதிர் கட்சி தலைவர்கள் அனைவரையும் ஒரே மேடைக்குக் கொண்டு வர வேண்டும் என்ற நாங்கள் விரும்பினோம்.

கடுமையான வேலை நெருக்கடிக்கு மத்தியில் நித்தீஷ் ஜி வந்திருக்கிறார். தோழர் திருமாவளவனும் இங்கிருக்கிறார். ஜார்கண்ட் முதல்வர் கேமந்த் சோரன் வர முடியவில்லை.

நாங்கள் சொல்ல விரும்புவது மிகவும் தெளிவான ஒன்று அரசியல் சட்டமும் ஜனநாயகமும் அபாயத்தில் இருக்கின்றன என்றால், பின் என்னதான் மிச்சமாக இருக்கும்?

இவற்றைக் காக்க நாம் தீர்மானகரமான போரில் இறங்கியாக வேண்டும். அதற்கு மாபெரும் ஒற்றுமை தேவையானதாக இருக்கிறது. நாம் 70ன் அவரச நிலையை திரும்பிப் பார்ப்போம். இன்றைக்கு இருக்கும் அறிவிக்கப்படாத அவசர நிலையைப் பார்க்கும்போது அது பரவாயில்லை என்று தோன்றுகிறது. இன்றைய அவசர நிலை நிரந்தரமான ஒன்று என்று தோன்றுகிறது. இருந்த போதும் 70களின் அவரசநிலை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அன்றைய அவசர நிலை எதிர்ப்புப் போராட்டத்தின் முன்னணிப் போராளியாக பீகார் இருந்தது. நிதீஷ் ஜியும், லாலு ஜியும் அந்த எதிர்ப்புப் போரின் விளைபொருட்கள் ஆகும்.

அந்த சமயத்தில் தோழர் ஜாகரும் பிறரும் போஜ்பூரில் தியாகியானார்கள். 1977ல் அந்த அவசரநிலை முடிவுக்கு வந்தது. தற்போதைய நிலை என்ன?

அவசரநிலையை தலைமைதாங்கி நடத்துபவர்கள், மனு வேதம்தான் தங்களின் அரசியல் சட்டம் என்று வெளிப்படையாகச் சொல்கிறார்கள். காவிதான் எங்களின் கொடி என்கின்றனர். இதனை அவர்கள் 1947லேயே சொல்லிவிட்டார்கள்.

இப்போது அவர்கள் அரசியல் சட்டத்தின் வழியில்தான் வேலை செய்கிறார்கள். (அவர்கள் தடை செய்யப்பட்ட பிறகு அவர்களுக்கு வேறு வழியில்லை). ஆனால், அவர்கள் அரசியல் சட்டத்தை படுமோசமான வகையில் கிண்டல் செய்கிறார்கள்.

இந்தியாவின் இறையாண்மை, சோசலிசம், மதச்சார்பின்மை, ஜனநாயக குடியரசு என்ற அரசியல் சட்டத்தின் மைய நாடியான லட்சியங்களை அவர்கள் கண்டுகொள்வதாக இல்லை. அவர்கள் குடியுரிமை விதிகளை மீறுகிறார்கள். நம்மை மறுபடியும் அடிமைகள் ஆக்குகிறார்கள்.

நமது எதிரிகள் தெரு அதிகாரத்தையும் அரச அதிகாரத்தையும் ஒன்றாக்கிச் செயல்படுகிறார்கள். அவர்களுக்கு எதிராக நாம் அவற்றைத் திருப்ப வேண்டும். நாம் அவ்விரண்டையும் இணைக்க வேண்டும்.

பாரத ஒற்றுமை யாத்திரை நல்ல முறையில் தற்போது நிறைவடைந்துள்ளது. பூர்ணியாவில் மாபெரும் எதிர்க்கட்சிகள் பேரணி நடைபெற உள்ளது. குடிமக்கள் திருத்தச் சட்டத்தை எதிர்த்துப் போராடிய தலைவர்கள் சிறையில் இருக்கும்போது, விவசாயச் சட்டங்களுக்கு எதிரான இயக்கம் துடிப்புடன் எழுந்தது. நமது தோழர்கள் தொழிலாளர்களுக்கான பல்வேறு இயக்கங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஜோஸிமத்தைக் காப்பாற்ற, அதுபோன்ற பிறவற்றைக் காப்பாற்றப் போராடி வருகிறார்கள். இதுபோன்ற சமயத்தில் எதிர்க்கட்சிகளின் ஐக்கியம் இந்த நிகழ்வுப் போக்கை முன்னெடுத்துச் செல்லும் என்று நம்புகிறோம்.

எங்கள் அகில இந்திய மாநாட்டின் ஒரு பகுதியாக நடக்கும் அமர்வு எங்களின் கட்சி வேலைகளையும் பரந்துபட்ட எதிர்க்கட்சி நீரோட்டத்தையும் இணைப்பதாக இருக்கிறது.

நான் ஒவ்வொருவருக்கும் குறிப்பாக நித்தீஷ் ஜிக்கு நன்றி சொல்கிறேன். தேர்தல் ஐக்கியத்தையும் ஒன்றுபட்ட மக்கள் போராட்டங்களையும் ஒன்றிணைத்திடுவோம். அது பாஜகவை 2024ல் தூக்கி வீசும். ❑

# சர்வதேசம் குறித்த விவாதத்தைத் தொகுத்து அளிக்கப்பட்ட பொதுச் செயலாளரின் பதிலுரை:

நாம் எதிர்கொள்ளும் மூன்று பெரிய கேள்விகள் இன்று இருக்கின்றன. அவை: உக்ரைன் யுத்தம், ரஷ்யா பற்றிய நமது அணுகுமுறை, சீனா பற்றிய நமது அணுகுமுறை.

உக்ரைன் யுத்தத்தைப் பொறுத்தவரை, ரஷ்யா ஆக்கிரமிப்பை எந்த சந்தேகத்திற்கும் இடம் இன்றி கண்டித்தோம். புட்டின் அரசு பாசிச அரசு என்று குறிப்பிட்டிருக்கிறோம். யுத்தம் எந்த அளவுக்கு நீள்கிறதோ அந்த அளவுக்கு நம் அனைவருக்குமான கூடுதலான சிரமங்களை யுத்தம் கொண்டுவரும். ஒருவேளை மூன்றாம் உலக யுத்தம் என்ற அபாயத்தையும் அது கொண்டு வரலாம். இப்பிரச்சனையில் ரஷ்யாதான் ஆக்கிரமிப்பாளர். நேட்டோவுக்கு ஆதரவாக உள்ள அமெரிக்கா இந்த யுத்தத்தால் பலன் பெறும். ரஷ்ய ஆக்கிரமிப்பு முடிவுக்கு வர வேண்டும் என்று மட்டும் நாம் விரும்பவில்லை. அமெரிக்க ஆக்கிரமிப்பும் முடிவுக்கு வர வேண்டும் என்றும் விரும்புகிறோம். மேலும், நாம் நேட்டோ கலைக்கப்பட வேண்டுமென்றும் நாம் கோருகிறோம். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வாகனமாக நேட்டோ இருக்கிறது.

லெனினின் தவறுகளை சரி செய்வதற்காக உக்ரைன் மீது போர் தொடுக்கப்பட்டுள்ளது என்று விளாடிமீர் புட்டின் சொல்கிறார். தேசிய இனப் பிரச்சனைகள் குறித்து லெனின் எடுத்த நிலைப்பாட்டினைத்தான் புட்டின் இப்படிச் சொல்கிறார்.

1917 புரட்சிக்குப் பின்பு தேசங்களுக்கு சுய நிர்ணய உரிமை கிடைத்தது. உக்ரைன் சுயாதிபத்தியம் உள்ள நாடாக மாறியது. நாம் லெனினின் நிலையை ஆதரிக்கிறோம். மேலும், லெனினுக்குப் பிந்தைய சோவியத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கை போன்றதே ரஷ்ய ஆக்கிரமிப்பு என்று கருதுகிறோம். அது பிரச்சனைக்குரியது.

ரஷ்யா மற்றும் சீனாவின் சோசலிச வரலாற்றின் காரணமாக அவர்களின் (குறிப்பாக) சர்வதேச கொள்கைகளை சிபிஎம் ஆதரிப்பதை நோக்கி சாய்வதற்கு வாய்ப்பிருக்கிறது. ரஷ்யா சோசலிச நாடாக இருந்தது. சீனா இன்னமும் சோசலிச நாடு என்றுதான் சொல்லிக்கொள்கிறது. ரஷ்ய சீன புரட்சிகளிலிருந்து நாம் உத்வேகம் பெறுகிறோம். இருந்தபோதும், சீனாவும் ரஷ்யாவும் 'கட்சி அரசாக' (Party State) மாறி விட்டன என்று நாம் புரிந்துகொள்கிறோம்.

ரஷ்யப் புரட்சி 1980களில் மங்கத் துவங்கியது. அப்போது சிபிஐஎம்எல் அந்த அதிகாரத்துவ அரசுக்கு எதிரான நிலையெடுத்தது. அந்த அதிகாரத்துவ அரசுக்கு எதிராகவும் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்ததற்கு எதிராகவும் நாம் நிலையெடுத்தோம். சிலர் 'சோசலிச குடியரசுகள்' சோசலிச ஏகாதிபத்தியமாக வடிவெடுத்து விட்டன என்று கூட குறிப்பிட்டனர். அதுவும் கூட ஒரு அதிதீவிர நிலைப்பாடுதான். நாம் அந்த அளவுக்குச் செல்லவில்லை. மாறாக, எந்தவித விமர்சனமுமின்றி ரஷ்ய மாதிரியை உயர்த்திப் பிடிக்க முடியாது என்று நாம் சொன்னோம்.

காலப்போக்கில் 'சீன குணாம்சம் உள்ள முதலாளித்துவமாக' சீனா மாறிவிட்டது. மிகவும் மலினமாக நல்வாழ்வு தத்துவமாக அது சோசலிசத்தைச் சுருக்கிவிட்டது. முதலாளித்துவம் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளது என்பது உண்மைதான். ஆனால், மிகக் கடுமையான அளவுக்கு அரசியல் சுதந்திரமின்மை நிலவுகிறது.

மேற்கு வங்கம் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. அங்கே கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரத்தில் இருந்தது. ஆனால், அது நீடித்து நிற்கின்ற மக்கள் சார்பு அரசியல் கட்டுமானத்தை ஏற்படுத்தவில்லை, அதனால்தான் இன்று, மேற்கு வங்கத்தில் இடதுசாரிகளுக்கு ஒரேயொரு எம்எல்ஏ கூட இல்லாமல் போய்விட்டது. மேலும் மேற்கு வங்கத்தில் பாசிசம் வலுவான முன்னேற்றத்தை நிகழ்த்தியுள்ளது.

இன்று சோசலிச முகாம் என்று ஒன்றிருப்பதாக நாம் நம்பவில்லை. வடகொரியா, வியட்னாம் போன்ற சில நாடுகள் தங்களை சோசலிச நாடுகள் என்று அழைத்துக் கொள்கின்றன. தங்களை சோசலிச நாடுகள் என்று இந்நாடுகள் சொல்வதை, ரஷ்யா, சீனா சோசலிசம் விவகாரத்தில் செய்தது போல நாம் ஆய்வுக் கண்ணோட்டத்தில் எடுத்துக்கொள்கிறோம். ஆப்பிரிக்காவிலும் பாகிஸ்தானிலும் சீனாவின் முதலாளித்துவம் என்ன செய்கிறது என்பதை நாம் விமர்சனக் கண்ணாடி வழியே பார்க்க வேண்டும். எனவே, ரஷ்யாவிடம் அதன் கடந்தகால சோசலிசம் காரணமாக சிபிஐஎம் பாசம் காட்டுவது போல நம்மால் அணுக முடியாது.

எனவே, உக்ரைனுக்கு எதிரான யுத்தத்தை நாம் எந்த சந்தேகத்திற்கும் இடமின்றி கண்டிக்கிறோம்.

இப்போது உலகம் பன்முக உலகத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது. ஒரு பக்கம் அமெரிக்காவின் பொருளாதாரம் சரிந்து கொண்டி ருக்கிறது. அதேபோல அதன் ராணுவ பலமும் மங்கிக் கொண்டிருக்கிறது. அப்படி இல்லை யென்றால், ஈராக் போல உக்ரைனும் நொறுங்கிப் போயிருக்கும். மற்றொரு பக்கம் பிராந்திய அதிகார குழுவினர் (regional power blocks) ஒன்று சேர்ந்து (சீனாவை, தெற்காசியாவை மையப்படுத்தி) சர்வதேச அரசியலை வடிவ மைக்கப் பார்க்கின்றனர். அது ஒரு போக்காக இருக்கிறதே தவிர முழுமையானதொரு காட்சியாக இன்னமும் வடிவம் பெறவில்லை. பன்முகத்தன்மை உள்ள உலகு என்பது நமக்கு பலன் தரக் கூடிய ஒன்றாகும். ரஷ்யாவும் சீனாவும் எழுந்து வருவது பல்துருவ உலகு உருவாவதற்கு ஆதரவான ஒன்றாகும். ஆனால், நாம் சர்வதேச அரங்கில், எந்த விமர்சனமுமின்றி ரஷ்யாவை ஆதரிக்கிறோம் என்றோ, அல்லது சீனாவை ஆதரிக்கிறோம் என்றோ பொருள் அல்ல. அவர்கள் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக் கையையும் அவற்றின் சாதக பாதகத்தை பொறுத்தே ஆதரிப்போம்.

இந்த நாடுகளின் சர்வதேச கொள்கைகள் குறித்த நமது நிலைப்பாடு எதுவாக இருந்தாலும் அதனை, (நாம் அவற்றில் எதனையாவது ஆதரிக் கிறோம் என்றால் கூட), இந்தியாவில் இன்று நாம் நடத்தி வரும் பாசிச எதிர்ப்புப் போருக்கு அவர்களிடமிருந்து உத்வேகம் பெறுகிறோம் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. ரஷ்யப் புரட்சி மற்றும் சீனப் புரட்சியின் பல்வேறு அம்சங்க ளிலிருந்து நாம் உத்வேகம் பெறுகிறோம் என்றாலும் நாம் அந்த நாடுகளை பின்பற்ற வேண்டிய மாடல் என்று ஒருபோதும் உயர்த்திப் பிடித்ததில்லை. மாவோ கூட சோசலிசத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்று சொன்னார். நாம் அதில் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற கோட்பாட்டை நாம் ஒப்புக்கொள்ளும் அதே சமயம், ஜனநாயகம் இல்லாமல் சோசலிசம் இல்லை என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். மேலும், இந்தியாவில் சோசலிசம் நமது பல கட்சி ஜனநாயக முறைக்குள்தான் செயல்பட வேண்டும். பல்வேறு அரசுகள் வந்தாலும் போனாலும் சோசலிச அடித்தளம் பாதிப்புக்கு ஆளாகாமல் இருக்கும் வகைப்பட்ட நீடித்து நிற்கும் வலுவான அரசியல் அமைப்பை (durable political fabric) உருவாக்குவதை நோக்கி நாம் போக வேண்டும். நாம் நிச்சயமாக முதலாளித்துவ ஜனநாயகத்தை உயர்த்திப் பிடிக்கவில்லை. மாறாக, முதலாளித்துவ ஜனநாயகத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட, பாட்டாளி வர்க்கச் சர்வா திகாரத்தில் நாம் நம்பிக்கை வைத்துள்ளோம்.

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை அமெரிக்காவை நோக்கியோ அல்லது இஸ்ரேலை நோக்கியோ நகரக் கூடாது என்று நாம் நம்பு கிறோம். இந்த இரண்டு நாடுகளும் ஏகாதிபத்தி யத்தின் இரண்டு பெரிய தொடர்புப் புள்ளிகள் ஆகும். நாம் நமது அண்டை நாடுகளான ஸ்ரீலங்கா, பாகிஸ்தான், வங்க தேசம், நேப்பாளம் மற்றும் பிறருடன் பொதுவான அம்சங்களைத் தேட வேண்டும்.

## ஸ்டாலின் குறித்து

1992ல் நாம் ஒரு தீர்மானத்தை நிறை வேற்றினோம். ஸ்டாலின் தலைமையின் கீழ் சோசலிச பாதையிலிருந்து வழி விலகல் ஏற்பட்டது என்று நாம் அதில் விமர்சனம் செய்தோம். ஸ்டாலினின் பாசிச எதிர்ப்பு மரபை நாம் ஏன் வலுவாக உயர்த்திப் பிடிப்பதில்லை என்று சிலர் ஆச்சரியப்படலாம். இரண்டாம் உலக யுத்தத்தின் இறுதியில் ஹிட்லர் வீழ்த்தப் படுவதற்கு ஸ்டாலின் தனியொருவராக பொறுப் பாவார் என்று நாம் நம்பவில்லை. செம்படையின் தலைமை தளபதி என்ற முறையில் அவர் மிகப் பெரிய பாத்திரம் ஆற்றினார். (போர்க் காலங்களில் சாதாரணமாக நடப்பது போன்று) அப்போதைய மக்களின் பாசிச எதிர்ப்புப் போராட்டங்கள் கவனிக்கப்படாது போயின. அந்த பாசிச எதிர்ப்பு மக்கள் போராட்டங்களுக்கு குறிப்பிடத்தக்க பங்கு உண்டு. மேலும் பாசிச எதிர்ப்புப் போருக்கான பெரிய தத்துவப் பங்களிப்பு எதனையும் ஸ்டாலின் செய்துவிட வில்லை. கிளாரா ஜெட்கின், டிமிட்ரோவ் போன்றோர்களின் தத்துவப் படைப்புகளையே நாம் நம் ஆய்வுக்குப் பயன்படுத்துகிறோம்.

இவையெல்லாம், சர்வதேச சூழல் குறித்த நமது புரிதலை உருவாக்கிய முக்கியமான தீர்மா னிக்கும் கூறுகளாகும் (broad thrust). கருத்து வேறுபாடுகள் இருக்கும் என்றால், அனுமதிக் கத்தக்க அளவுக்கு, நாம் வேறுபாட்டை தக்க வைத்துக்கொள்ளலாம். நீங்கள் வேறு ஏதேனும் சேர்க்கைகளைச் செய்ய வேண்டும் என்று விரும்பினால் அவை செய்யப்படலாம். ❑

# மக்கள் இயக்கங்களை வலுப்படுத்திடும் நோக்கில் நம் இரு நாட்டு மக்களின் உறவுகளை மேம்படுத்திடுவோம்!

(நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (ஐக்கிய மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) மூத்த தலைவ ஈஸ்வர் பொக்ரேல் உரையிலிருந்து)




இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்)ன் 11ஆவது அகில இந்திய மாநாட்டில் பங்கேற்க சிபிஎன் (யுஎம்எல்) கட்சியை அழைத்ததற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் மாநாடு பெரும் வெற்றியடைய என்னுடைய வாழ்த்துகள்.

இந்த நேரத்தில் நக்சல் பாரி இயக்க தலைவர்களான தோழர் சாருமஜூம்தார், தோழர் சுப்ரதா தத், தோழர் வினோத் மிஸ்ரா ஆகியோரை நான் நினைவு கூர்கிறேன். பல பத்தாண்டுகளாக விவசாயிகள், தொழிலாளர்கள், அறிவாளிப் பிரிவினரை அமைப்பாக்க நீண்ட நெடிய போராட்டம் நடத்தி வரும் இந்தியாவின் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிற்கும் நேபாளத்திற்கும் இடையில் வலுவான உறவு இருக்கிறது. நாம் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்கிறோம். நமது உறவு என்பது அரசியல் கலந்துரையாடலை தாண்டி, இரு நாட்டு மக்களுக்கிடையிலான உறவாக இருக்க வேண்டும். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நேபாள தலைவர்கள் முக்கிய பங்காற்றியிருக்கிறார்கள். இது குறித்து நான் பெருமிதம் கொள்கிறேன். எங்களது கம்யூனிஸ்ட் கட்சி, அதன் தலைவராக இருந்த மன்மோகன் அதிகாரி, இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்காற்றியிருக்கிறார். நேபாள நாட்டு மக்கள் இயக்கங்களுக்கு இந்திய மக்கள் எப்போதுமே ஒருமைப்பாடு தெரிவித்து வந்திருக்கிறார்கள். நெருக்கடியான காலங்களில் கூட இந்தியாவில் உள்ள தோழர்களுடன் உறவு இருந்ததை நான் நினைத்துப் பார்க்கிறேன். நம் உறவு இரு நாட்டு கம்யூனிஸ்ட் இயக்கங்களையும் வலுப்படுத்தி இருக்கிறது. இதற்கு முன்னர் நடந்த உங்கள் கட்சி மாநாடுகளில் எங்கள் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் நேபாளத்தில் நடந்த தேர்தலில் மக்களின் முதல் விருப்பமாக, தேர்வாக எங்கள் கட்சியே இருந்தது. பிராந்திய மட்டத்தில் நடந்த தேர்தலிலும் எங்கள் கட்சியே மிகவும் செல்வாக்கு பெற்ற கட்சியாக இருந்தது. மக்களின் பேராதரவைப் பெற்ற கட்சியாக உள்ளது. பல்வேறு மட்ட தேர்தல்களில் எங்கள் கட்சி பெற்ற வெற்றி என்பது மகிழ்ச்சி தரக்கூடியது மாத்திரமல்ல, அது ஒவ்வொரு காலகட்டத்திலும் கட்சி நடத்தியிருக்கக்கூடிய நீண்ட நெடிய போராட்டத்தின் பிரதிபலிப்பும் ஆகும். அதனால்தான் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்சியாக உள்ளோம். இந்த தேர்தலில் அரசாங்கம் அமைக்க எந்த கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாத நிலையில் பல கட்சிகளையும் இணைத்துக் கூட்டணி உருவாக்கி அரசாங்கத்தை அமைத்திருக்கிறோம்.

எங்கள் கட்சித் தலைவரின் தலைமையின் கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டு குறைந்தபட்ச பொதுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அரசாங்கம் செயல்பட்டு வருகிறது. நாம் தொழிலாளர்களுக்காக, பெண்களுக்காக, ஒடுக்கப்பட்ட பிரிவினருக்காக, அவர்களின் மகிழ்ச்சிக்காக, அவர்களின் உரிமையை உத்தரவாதம் செய்வதற்காக இருக்கிறோம். நாங்கள் வெறும் அரசியல் விசயங்களில் மட்டும் கவனம் செலுத்துவதில்லை. அதைத் தாண்டி மக்களின் கலாச்சார, பண்பாட்டு விசயங்களிலும் கவனம் செலுத்துகிறோம். பிற்போக்கு சக்திகள் தொழிலாளர் வர்க்கத்தின் மீது தொடுத்து வரும் தாக்குதலை முறியடிப்பது நமது கடமையாக உள்ளது. எங்கள் முன்னால் உள்ள சவால்கள் பற்றி நாங்கள் அறிந்தே வைத்திருக்கிறோம். எங்களைப் போல் தான் சிபிஐ எம்எல் கட்சியை சேர்ந்த நீங்களும் பிற்போக்கு சக்திகளின் தொழிலாளர் மீதான தாக்குதலை எதிர்கொள்கிறீர்கள்.

கோவிட் 19 காலகட்டம் என்பது இந்த முதலாளித்துவ கட்டுமானம் எப்படி ஒரு சிலருக்கானதாக உள்ளது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியது. மக்கள் விரோத கட்டமைப்புகளை, நிறுவனங்களை வேரடி மண்ணோடு அகற்ற வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. சோசலிசத்தால் மட்டுமே சமத்துவத்தையும் எல்லோருக்குமான உரிமையையும் உத்தரவாதம் செய்ய முடியும்.

நாங்கள் அமைதி வழியில் ஒரு கம்யூனிச புரட்சிக்கான போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். எங்கள் கட்சி குறிப்பிட்ட

வரலாற்று ரீதியான கலாச்சார பின்புலத்தில் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. நம் இரு நாடுகளிலும் நடைபெற்ற கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வெற்றி தோல்விகளை கற்றுக்கொள்ள முயன்று வருகிறோம்.

உங்களது 11ஆவது கட்சி காங்கிரஸ் முற்றிலும் புதிய சூழலில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கம்யூனிச இயக்கத்தின் வெற்றி தோல்விகளை பரிசீலித்து, ஆராய்ந்து இந்த மாநாட்டில் சிறந்த முடிவுகளை நீங்கள் எடுப்பீர்கள் என நான் நினைக்கிறேன். இந்த மாநாடு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாடாக அமையும் என நான் நம்புகிறேன்.

மக்கள் இயக்கங்களை வலுப்படுத்திடும் நோக்கில் சிபிஎன் (யு எம் எல்) கட்சி சிபிஐ (எம் எல்) கட்சியுடன் உறவை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் என விரும்புகிறது. மாநாட்டில் கலந்து கொண்டிருக்கும் அனைவருக்கும் மீண்டும் புரட்சிகர வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். போராடும் இரு நாட்டு மக்களுக்கிடையிலான ஒருமைப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் மேலும் மேலும் வளத்திடுவோம்! உறுதிப்படுத்திடுவோம்!.




## இகக(மாலெ) புதிய மத்தியக்குழு

## தலித் மக்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து கருத்தரங்கம்



அதிகரித்துவரும் தலித் மக்கள் மீதான தாக்குதலை கண்டித்து கர்நாடகா மாநிலம் பெங்களூருவில் பிப்ரவரி 25 அன்று மாநில அளவிலான கருத்தரங்கம் நடைபெற்றது. அந்த கருத்தரங்கத்தில் அனைத்திந்திய விவசாய கிராமப்புறத் தொழிலாளர்கள் சங்கத்தின் அகில இந்திய துணைத் தலைவர் தோழர் பாலசுந்தரம் கலந்துகொண்டார். இந்நிகழ்ச்சியை அவிகிதொச, மார்க்சிஸ்ட் கட்சி, தலித் அமைப்புகள் இணைந்து நடந்தின. மார்க்சிஸ்ட் கட்சியின் தோழர் சுபாஷினி அலி கலந்து கொண்டார்.

## மக்கள் விரோத சனாதன சக்திகளைக் கண்டித்து விசிக ஆர்ப்பாட்டம்

சென்னையில் பிப்ரவரி 28 அன்று மக்கள் விரோத பாசிச பாஜக மற்றும் சனாதன சக்திகளைக் கண்டித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது. அந்த ஆர்ப்பாட்டத்தில் இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.



## ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் ஏபிவிபி குண்டர்களால் தமிழ்நாடு மாணவர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து அகில இந்திய மாணவர் கழகம் பெரியார் படத்துடன் பேரணி



டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில், தமிழ்நாடு மாணவர்கள் பெரியார் படத்தை தாங்கள் தங்கியிருக்கும் இடத்தில் வைத்திருந்தார்கள் என்பதற்காக சங்கிகள் மாணவர் அமைப்பான ஏபிவிபியின் குண்டர்கள் தமிழ்நாட்டு மாணவர்களைத் தாக்கினார்கள். பல்கலைக் கழகத்தின் அலுவலகத்தை அடித்து நொறுக்கினார்கள். பெரியார், அம்பேக்கர், மார்க்ஸ் படங்களை இழிவுப்படுத்தியதனைக் கண்டித்து பிப்ரவரி 25ம் தேதி அகில இந்திய மாணவர் கழகம் (அய்சா) சார்பாக மாணவர்கள் பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ், அசபுல்லாகான், பகத் சிங், பூலே, சாவித்திரிபாய், அயோத்திதாசர், தோழர் சந்திரசேகர் போன்றோரின் படங்களுடன் பேரணி நடத்தினார்கள்.

முன்னதாக, இகக(மாலெ)யின் அகில இந்திய மாநாடு பாட்னாவில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மும்பை ஐஐடியில் தலித் பெண் மாணவர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் இறந்த மாணவருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக மாநாட்டு வளாகத்தில் அகில இந்திய மாணவர் கழகம் சார்பாக மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. ❑

## பழி வாங்கும் நோக்கத்தோடு பாசிச மோடி-ஷா ஆட்சியாளர்களால் டெல்லியின் துணை முதல்வர் மணிஷ் சிசோடியா கைது செய்யப்பட்டதற்கு கண்டனம்!

ஜனநாயகத்தின் மீது இன்னொரு அராஜகத் தாக்குதலாக மோடி அரசாங்கமானது மீண்டும் ஒருமுறை மத்திய புலனாய்வுத்துறை மற்றும் அமலாக்கத் துறையைப் பயன்படுத்தி தன்னுடைய பழி வாங்கும் அரசியலை நிறைவேற்றியிருக்கிறது. கடந்த பிப்ரவரி 26 அன்று பல மணி நேர விசாரணைக்குப் பிறகு, டெல்லி துணை முதல்வர் மணிஷ் சிசோடியா விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை என்று சொத்தை காரணத்தைச் சொல்லி மத்திய புலனாய்வுத்துறை அவரை கைது செய்திருக்கிறது.

டெல்லி பெருநகர மாநகராட்சி தேர்தலில் தோல்வி அடைந்து, எப்பாடுபட்டாவது மேயர் பதவியை கைப்பற்ற எடுத்த முயற்சியும் தோல்வி அடைந்த பிறகு, மோடி-ஷா ஆட்சியாளர்கள் இப்போது மத்திய அரசின் நிறுவனங்களை நேர்மையற்ற முறையில் தவறாக பயன்படுத்துகிறார்கள். அதானி ஊழல் சம்பந்தமாக மோடி அரசு கடைபிடிக்கும் வெளிப்படையான மௌனம் குறித்தும் இந்த இமாலய கார்ப்பரேட் மோசடி பற்றி விசாரணை செய்ய மறுப்பது குறித்தும் மொத்த உலகமும் கேள்வி எழுப்பும் போது, மோடி அரசாங்கம் எந்த வாய்ப்பையும் தவறவிடாமல் எதிர்க்கட்சிகளை அச்சுறுத்த முயற்சித்து வருகிறது.

டெல்லி, தேசிய தலைநகர் மண்டலத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட துணை முதல்வர் மணிஷ் சிசோடியாவின் கைதுக்கு சிபிஐ(எம்எல்) கடும் கண்டனம் தெரிவிக்கிறது. மத்திய அரசு நிறுவனங்களை தவறாகப் பயன்படுத்தி கூட்டாட்சியையும் ஜனநாயகத்தையும் குழி தோண்டிப் புதைக்கும் பாஜகவின் அச்சமற்ற முயற்சிகளுக்கு எதிராக டெல்லியின் குடிமக்களும் பரந்த இந்திய மக்களும் எழுந்து நின்று தங்களது எதிர்ப்பை தெரிவிக்குமாறு நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம்.❑


**திபங்கர்**
**பொதுச் செயலாளர்,**
**இகக(மாலெ)**

# அலைடா குவாராவிற்கு வரவேற்பு





*புரட்சியாளர் சேகுவாராவின் மகள் அலைடா குவாரா இந்தியாவிற்கு வந்தபோது டெல்லியில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் இகக(மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர், இகக பொதுச் செயலாளர் து.ராஜா, இகக(மா) பொதுச் செயலாளர் தோழர் சீத்தாராம் யெச்சூரி, ஆர்ஜேடி நாடாளுமன்ற உறுப்பினர் மனோஜ் ஜா, கியூபாவின் தூதர் அலெக்ஸாண்டர் சிமன்காஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். அந்த நிகழ்வில் பேசிய அலைடா, பொருளாதார தடை பற்றி பேசுவது எளிதானது. ஆனால், அதை நேரில் அனுபவிக்கும்போதுதான் அது எவ்வளவு கஷ்டமானது என்பதை உணரமுடியும் என்றார். அவர் மேலும் நாங்கள் பொருளாதாரத் தடைக்கு எதிராக பல ஆண்டுகளாகப் போராடிக் கொண்டிருக்கிறோம். அதற்காக நாங்கள் பெரும் விலை கொடுத்துள்ளோம். கியூபாவிற்கு மருந்துகள் விற்றால் அந்த நிறுவனத்திற்கு அமெரிக்காவில் அபராதம் விதிக்கப்படும், கியூபாவுடன் வணிகம் செய்தால் அந்த நாட்டில் இருந்து தன்னுடைய முதலீட்டை அமெரிக்கா திரும்பப் பெற்றுக் கொள்ளும் என்றார்.* ❑

# கோவில்பட்டி தோழர் பொன்ராஜுக்கு செவ்வஞ்சலி



*தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் இகக(மாலெ) கட்சியின் தலை மறைவு காலத்தில் இருந்தே செயலாற்றி வந்த மூத்த தோழர் பொன்ராஜ் (81) உடல் நலமின்றி 20.2.2023 அன்று இரவு 9.30 மணியளவில் காலமானார். தமிழ்நாடு மின்சார வாரியத்தில், அரசு ஊழியராக இருந்து கொண்டு புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியில் மிகவும் அர்ப்பணிப்போடு செயலாற்றி வந்தார் தோழர் பொன்ராஜ். தோழர் பொன்ராஜ் துணிச்சலோடு, உறுதியோடு கட்சிப் பணிகளைச் செய்து வந்தார். தமிழ்நாட்டில் குறிப்பாக தூத்துக்குடி மாவட்டத்தில் கட்சியை வளர்க்க தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார். தோழர் பொன்ராஜுக்கு செவ்வணக்கம்!.*

# கேரள மாநிலச் செயலாளர் தோழர் ஜான் கே.எருமேலிக்கு செவ்வஞ்சலி!



*கேரள மாநிலத்தின் இகக(மாலெ) மாநிலச் செயலாளராகச் செயலாற்றி வந்த தோழர் ஜான் கே.எருமேலி(80) கடந்த 10.2.2023 அன்று காலமானார். பல ஆண்டுகளாக கேரள மாநிலத்தின் இகக(மாலெ) செயலாளராகப் பணியாற்றி வந்தவர் தோழர் ஜான்.கே.எருமேலி. தோழருக்கு செவ்வணக்கம்!.*

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 04.03.2023 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# இகக(மாலெ) அகில இந்திய மாநாட்டில்...









Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh